REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜனவரி 17 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
වරු. 92 இல. 15 | Wednesday 17, January, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## மத்திய வங்கி ஆளுநரின் கூற்று;
## TV கலந்துரையாடல் இன்று இரவு 10 மணிக்கு
### அமைச்சர் பந்துலவும் பங்கேற்பு



நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதை தவிர வேறு வழியில்லை என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி 06

## டாவோஸ் நகரில் முக்கிய சந்திப்பு



சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டுடன் இணைந்த வகையில், அமெரிக்காவின் முன்னாள் உப ஜனாதிபதியும் காலநிலை யதாரத்த திட்ட அமைப்பின் நிறுவுனருமான அல் கோர் (Al Gore) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார். காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன மற்றும் ஜெனீவாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதியும் தூதுவருமான ஹிமாலி அருணதிலக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## T–750,T–709 மற்றும் T–200 வகையான சகல வித
# தேயிலை உரங்களின் விலை 2,000 ரூபாவால் குறைப்பு
### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**சந்தையில் தற்போதுள்ள தேயிலை உரங்களின் விலை 50 வீதத்தால் குறைக்கப்படுவதுடன் இதற்காகத் தேவைப்படும் மேலதிக நிதியான 1200 மில்லியன் ரூபாவை இலங்கை தேயிலை சபை மூலம் வழங்கவும் நடவடிக்கை**



தேயிலை உற்பத்தித் துறைக்கான உர வகைகளின் விலைகளை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்த வகையில்,தேயிலை பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற T 750, T 709 மற்றும் T 200 ரக உரங்களின் விலையை 2,000 ரூபாவால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வொன்றின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி சந்தையில் தற்போது விற்பனையில் உள்ள தேயிலை உரங்களின் விலைகளோடு ஒப்பிடும் போது 100 க்கு 50 வீதத்தால் இந்த விலைக் குறைப்பு இடம் பெறவுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது விற்பனை நிலையங்களில் உள்ள தேயிலை உரங்களின் ஒரு மூடையின் மொத்த விலை 13,000 ரூபாவாகும்.

இந்த நிலையில் தேயிலை பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற T750 மற்றும் T709 உரங்கள் ஒரு மூடையின் விலையை 7,735 ரூபாவாகவும் T 200 உரம் ஒரு மூடையின் விலையை 5,500 ரூபாவாகவும் குறைப்பதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான சம்பந்தப்பட்ட இரண்டு 06

## இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் முதலிட இதுவே உரிய தருணம்
### சுவிஸ் பசுமை தொழில்நுட்ப மன்றத்தில் ஜனாதிபதி வலியுறுத்தல்



இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய இதுவே சரியான தருணம் என்றும், இவ்வாறான முதலீடுகள் அடுத்து வரும் தசாப்தங்களில், பங்குதாரர்களுக்கும் இலங்கை நுகர்வோருக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06

## முச்சக்கர வண்டி தொழில்துறை: கிவ்.ஆர். கோட் அறிமுகமாகிறது
### அமைச்சரால் விசேட குழு நியமனம்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் முச்சக்கர வண்டி சாரதிகளாக செயற்படும் அனைவரையும் பதிவு செய்து தரவுத் தொகுதியொன்றை தயாரிக்கும் வகையில், கிவ். ஆர். கோட் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையை கவனத்திற் கொண்டு 06

## மின்சாரக் கட்டணத்திற்கு ஏற்ப நீர்க்கட்டணமும் குறைக்கப்படும்



மின்சாரக் கட்டணம் குறைக்கப்படவுள்ளதால் அதற்கு ஏற்ப, நீர்க் கட்டணத்தையும் குறைக்க தீர்மானித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் 06

## வெள்ளத்தால் பாதிப்புற்ற அம்பாறையை கட்டியெழுப்ப ஜனாதிபதி உத்தரவு
### அமைச்சர் பந்துல நேரடியாகச் சென்று துரித பணிகளை முன்னெடுப்பு



அம்பாறை பிரதேசத்தில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களை அவதானிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர், கலாநிதி பந்துல குணவர்தன அம்பாரைக்குச் சென்றிருந்தார். அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. வீரசிங்கவின் அழைப்பின் பேரில் அங்கு 06

## இவ்வருடமும் ஏமாற்றினால் விளைவுகள் பாரதூரமாகும்
### தமிழர்கள் உச்சளவு ஒத்துழைத்தும் தீர்வுகள் கிடைக்கவில்லை



"அரசாங்கம் இந்த வருடமும் எம்மை ஏமாற்றினால் விளைவுகள் வேறு விதமாக அமையலாமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அவர் வழங்கிய பொங்கல் வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் 06

## கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளில் காற்றின் தரம் குறைவடைவு
### சுவாச நோய் தொடர்பானவர்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் காற்றின் தரம் குறைந்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் காலி மாவட்டங்களில் பல்வேறு 06

## 03 பௌத்த மதத்தை இழிவுபடுத்திய மஹிந்த கொடித்துவக்கு கைது
24 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு



## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்பூசல் உக்கிரம்

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், அதிருப்தியில் உள்ளதாக அரசியல்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர்கள் குழுவிலிருந்த ஜீ.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா போன்றோர், கட்சியில் இணைந்ததால்,இவர்களுக்கு இந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

அரசியல் செயற்பாடுகளில்,ஜீ,எல், பீரிஸ் மற்றும் பொருளாதார 06

## சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 232 வீதமாக அதிகரிப்பு
### நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய வேண்டுகோள்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சிறைச்சாலைகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களாகும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவ செயலணி தெரிவித்துள்ளது. நூற்றுக்கு 232 வீத அதிகரிப்பு காணப்படுவதாகவும் இதனால், வருடமொன்றிற்கு 800 06

## அமெரிக்க தேர்தலிலிருந்து விவேக் ராமசாமி ராஜினாமா



அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்த இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி, அவரது முடிவிலிருந்து பின்வாங்கியுள்ளார்.

அமெரிக்காவில், வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய அதிபரான ஜோ பைடன், ஜனநாயக 06

## TIN இலக்கத்தை பெற வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கு சலுகைகள்
### இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

வெளிநாடுகளில் கல்வி கற்கும் இலங்கையர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் 'டின்' இலக்கத்தைப் பெறுவது கட்டாயமில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் பி.கே. சமன் சாந்த தெரிவித்துள்ளார்.

எனினும், டின் நம்பரைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வெளிநாட்டில் உள்ள ஒருவர், இலங்கையிலிருந்து வருமானம் ஈட்டினால் (வட்டி 06

### கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம்
## கைதிகள் தப்பியோடியதை விசாரிக்க ஐவரடங்கிய குழு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஐவரடங்கிய குழுவை நியமித்துள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு தமக்கு அறிக்கையொன்றை 06

### பரீட்சைத் தாள்களை முன்கூட்டி வெளியாக்கல்
## ரியூசன் வகுப்புக்களில் அதிக மாணவர்களை சேர்க்கும் மோசடி



மேலதிக வகுப்புக்களுக்கு மாணவர்களை அதிகளவில் இணைத்துக்கொள்ளும் நோக்கில், பரீட்சை வினாத்தாள்களை ஆசிரியர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடுகிறார்களா என்பது தொடர்பில், ஆராய வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்வருட உயர் தரப் பரீட்சையின் விவசாய பாடத்தின் இரண்டாம் வினாத்தாள், சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டமை தொடர்பில், ஊடகங்களுக்கு அவர் கருத்துரைக் கையிலே, இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இதுபற்றித் தெரிவித்த அமைச்சர்; முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 06



யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நீதி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வடக்கின் உதயம்

# பூநகரியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு

## வடமாகாண ஆளுநர்

**பரந்தன் குறூப் நிருபர்**



பூநகரி பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பாக, சுற்றுலாத்துறை அபிவிருத்தியையிட்டு குளங்களை அமைத்தல் போன்ற அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அம்மாகாண ஆளுநரின் பங்குபற்றுதலுடன் கிளிநொச்சியின் பூநகரி பல்லவராயன்கட்டு பிரதேசத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, வடமாகாண ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இந்த தைப்பொங்கல் விழாவில் பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன், வடக்கு மாகாண பதவிநிலை உத்தியோகத்தர்கள், விவசாய பெருமக்கள், பூநகரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவின் போது முன்னராக பல்லவராயன்கட்டு பிரதேசத்திலிருந்து நெற்புதிர் எடுத்து வரப்பட்டு, ஆலயத்தில் பொங்கல் வழிபாடு நடைபெற்றது. இதன் பின்னர், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த விழாவில் தொடர்ந்து உரையாற்றிய வடமாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அனைத்து தரப்புகளையும் ஒன்றிணைத்து ஐந்து ஆண்டுக்குரிய திட்டமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் அதற்கான வேலைத்திட்டங்களை தாம் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது –2024



யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பாலின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக யாழ். முஸ்லிம் சமூக ஜோதி 2024 விருதுக்காக நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியியலாளரும் சமூகப்பற்றுடையவருமான மஹ்றூப் ஏ.காதர், யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ். அஸீம், யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் கால்பந்தாட்ட நட்சத்திர கோல் கீப்பர் எம்.எம்.முனாஸ் ஆகிய நால்வரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். முஸ்லிம் சமூக ஜோதி 2024 விருதுக்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக எம்.எஸ்.ஜாபிர் அனுசரணை வழங்குகிறார்.

# யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் தினத்தில் பட்டத் திருவிழா

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**



தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தையொட்டி யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) நடத்தப்பட்ட பட்டத் திருவிழா போட்டியில் 'ஆகாய விமானம் தாங்கிய போர் விமானம்' எனும் பட்டம் முதலாமிடத்தைப் பெற்றதுடன், இதற்கான பரிசை அப்பட்டத்தை வடிவமைத்த வினோதன் பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் இடத்தை 'விண்வெளியில் நிலை நிறுத்திய செயற்கை கோள்' எனும் பட்டம் பெற்றதுடன், இதற்கான பரிசை இப்பட்டத்தை வடிவமைத்த பிரசாந்த் பெற்றுக் கொண்டார்.

கடந்த 6 ஆண்டுகளாக (2016, 2017, 2018, 2019, 2020, 2023 ) நடைபெற்ற பட்டத் திருவிழா போட்டியில் முதலாமிடத்தை பெற்று வந்த பட்டக் கலைஞர் இம்முறை இப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றார். விண்வெளியில் நிலை நிறுத்தப்பட்ட செயற்கை கோள் பட்டமே இரண்டாமிடத்தை பெற்றது.

மூன்றாம் இடத்தை 'ஏலியன்ஸ் மர்ம தாக்குதல் விமானம்' எனும் பட்டம் பெற்றதுடன், இதற்கான பரிசை இப்பட்டத்தை வடிவமைத்த கம்ஸன் பெற்றுக்கொண்டார்.

இப்பட்டத் திருவிழா போட்டியில் பல்வேறு வகையான வண்ணங்களில் பல்வேறு வடிவங்களில் பட்டங்கள் வடிவமைக்கப்பட்டு போட்டியாளர்களால் வானில் ஏற்றப்பட்டன. 60க்கும் மேற்பட்ட பட்டங்கள் வானில் ஏற்றப்பட்டன.

தைப்பொங்கல் தினத்தையிட்டு யாழ்ப்பாணத்தில் வருடம் தோறும் பட்டத் திருவிழாவை வல்வெட்டித்துறை விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் நடத்தி வருகின்றமை வழமையாகும்.

## வேலணையில்

# சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நீதி அமைச்சரிடம் கோரிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், வேலணை பிரதேசத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் அப்பிரதேச பொது அமைப்புப் பிரதிநிதியொருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்மராட்சியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நீதி அமைச்சருக்கும் கிராம மட்ட சகவாழ்வு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே, வேலணை கிழக்கு மத்தி பிரதேச பிரதிநிதி இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இந்த சந்திப்பு தொடர்பாக வேலணை கிழக்கு மத்தி பிரதேச பிரதிநிதி தெரிவித்த போது,

"வேலணை பிரதேசத்தில் கடற்றொழில் மற்றும் விவசாயமும் பிரதான தொழில்களாக உள்ளன. கால்நடை வளர்ப்பால் அதிகளவான மக்கள் வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்நிலையில், கால்நடைகளை திருடி அவற்றை இறைச்சிக்காக பயன்படுத்தப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பசு உள்ளிட்ட மாடுகள் திருடப்படுவதுடன், தினமும் சராசரியாக 3 மாடுகள்வரை திருடப்படுகின்றன. இதனால் மக்கள் வாழ்வாதார ரீதியாக வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டம்வரை கொண்டு சென்றபோதிலும், இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

இதேவேளை, வேலணை நீர்வளம் குறைந்த பிரதேசமாக உள்ள நிலையில் நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியுள்ளது. இங்கு சட்டவிரோத மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெறுவதால், குடிநீர் உவர் நீராக மாறுகின்றது. 1990 - 2019 வரையான காலப்பகுதிக்கிடையில் வேலணையில் 70 சதவீதமான நன்னீர் கிணறுகளில் உவர்நீராக மாறியுள்ளன. எனவே, வேலணை மக்களுக்கு பாரிய சவால்களாக காணப்படும் கால்நடை திருட்டு மற்றும் மணல் அகழ்வு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளேன்" என்றார்.

## புதுக்குடியிருப்பில்

# போதைப் பாவனைக்கு அடிமையான இருவர் கைது

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான குற்றச்சாட்டில் கிராம அலுவலர் ஒருவர் உட்பட இருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றி வரும் சந்தேக நபரான கிராம அலுவலர் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினர்களுக்கு போதைப்பொருள் வியாபாரம் செய்து வந்ததாகவும் ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருளை பல இளைஞர்களூடாக பல்வேறு தரப்பினருக்கும் இவர் விற்பனை செய்து வந்ததாகவும் இவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்ததாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் இச்சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது, இவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவில் விபத்து; இளைஞர் படுகாயம்

**ஓமந்தை விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்**



சிலாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதி விபத்து இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற இ.போ.ச. பஸ் வண்டியானது சிலாவத்தை சந்தியை அண்மித்த வேளையில், பிரதான வீதிக்கு செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள், அப்பஸ் வண்டியுடன் மோதி விபத்து இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கள்ளப்பாடு பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

இ.போ.ச. பஸ் வண்டியும் மோட்டார் சைக்கிளும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எருக்கலம்பிட்டியில் சங்குகளுடன் மூவர் கைது

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார், எருக்கலம்பிட்டி பிரதேசத்தில் அனுமதி வழங்கப்பட்ட அளவைவிட, பல இலட்சம் ரூபா பெறுமதியான சிறியளவிலான சங்குகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட மூவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) மதியம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருடன் பொலிஸார் இணைந்து சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது, எருக்கலம்பிட்டியிலுள்ள வீடொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த சங்குகளை அவர்கள் கைப்பற்றியதுடன், சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். இந்தக் களஞ்சியசாலையில் 20 ஆயிரம் சங்குகளே களஞ்சியப்படுத்த அனுமதி வழங்கப்பட்ட நிலையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சங்குகளும் வளர்ச்சி நிலையை அடையாத சங்குகளும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் களஞ்சியசாலையிலிருந்து 14,143 சங்குகள், 16 கிலோகிராம் காய்ந்த அட்டைகள், 700 உயிர் அட்டைகளையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், மேலதிக விசாரணைக்காக சான்றுப் பொருட்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி – மென்சீஸ் விமானச் சேவை தலைவர் சந்திப்பு



சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மாநாட்டுடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் மென்சீஸ் விமானச் சேவை (Menzies Airlines)யின் தலைவர் ஹசன் என் ஹவுரிக்கும் (Hassan ElHoury) இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார்.

# பாராளுமன்ற அமர்வுகள் இம்மாதம் 24 இல், நிறைவு



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது சபை அமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

இதற்கமைய, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது சபை அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

பாராளுமன்ற சபை அமர்வை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி வெளியிடுவார் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பராளுமன்ற சபை அமர்வு முடிவுக்கு கொண்டுவரப் பட்டவுடன், கோப் மற்றும் கோபா உள்ளிட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுக்களின் பதவிக்காலங்களும் முடிவடையவுள்ளன.

இதற்கமைய பாராளுமன்ற சபை அமர்வு மீள ஆரம்பமான பின்னர், குறித்த தெரிவுக்குழுக் கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளன.

# 72 சுகாதாரத்துறை தொழிற்சங்க போராட்டத்தால் நோயாளர் நிர்க்கதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுகாதாரத் துறையில் மருத்துவர்கள் தவிர்ந்த 72 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் நேற்று முன்னெடுத்த வேலை நிறுத்தத்தால், நாடளாவிய ரீதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

சுகாதார சேவை தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், நிதி இராஜாங்க அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையிலும், 72 சுகாதார சேவை தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர்.

சில கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள், நேற்று காலை 6.30 மணி முதல் 24 மணித்தியாலங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மருத்துவர்களுக்கு வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ள 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் பெற்றுத் தருமாறு கோரியே சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

எனினும், அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர். எவ்வாறெனினும் நேற்றைய தினம் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற விருந்தது. இதற்கான அழைப்பை சுகாதார அமைச்சர் விடுத்திருந்தார்.

அநாவசியமாக சுகாதார தொழிற்சங்கங்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தால், தொடர்ந்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க நேருமென, தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பௌத்த மதத்தை இழிவு படுத்திய மஹிந்த கொடித்துவக்கு கைது

## 24 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் தவறான போதனைகளை முன்னெடுத்த மஹிந்த கொடித்துவக்கு கைதான நிலையில், அவரை எதிர்வரும் 24 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இவரை ஆஜர்படுத்தியபோது, நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

06

# குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்துக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

(மாவத்தகம தினகரன் நிருபர்)

குருநாகல் முஸ்லிம் வர்த்தக சசங்கத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தில் சேர்வதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்ட ஒருவரே இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இதுகுறித்து பொலிஸில் அவர் முறையிட்டதையடுத்து பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர். இதை விசாரித்த குருநாகல் நீதிமன்றம் அவ்வழக்கை தள்ளுபடி செய்தது.

அங்கத்துவ படிவத்தில் கோரப்பட்ட உறுதியான ஆவணங்களை உரிய நபர், சமர்ப்பிக்காததாலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.


## வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் கைப்பணிப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், பத்திக் மற்றும் துணி கடைகளை நடாத்திச் செல்வதற்கான தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF SHOPS FOR HANDICRAFT, HANDLOOMS, BATIK & TEXTILE IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **143/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நடைபாதையில் கைப்பணிப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், பத்திக் மற்றும் துணி கடைகளை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் மரமுந்திரி கடையை நடாத்திச் செல்வதற்கான தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A CASHEW SHOP IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **144/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் மர முந்திரி கடையை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்கள் மற்றும் அது சார்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் நடமாடும் தொடர்பாடல் சேவை நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF MOBILE COMMUNICATION SERVICES CENTRE IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **145/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் நடமாடும் தொடர்பாடல் சேவை நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனி நபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் உள்நாட்டு இனிப்புகள் அல்லது / மற்றும் வாசனைத் திரவியங்கள் அல்லது / மற்றும் ஆயுர்வேத ஆரோக்கிய உற்பத்திகள் (பிரத்தியேக பராமரிப்பு உற்பத்திகள் இன்றி) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A SHOP FOR LOCAL SWEETS AND/OR SPICES AND/ OR HERBAL WELLNESS PRODUCTS (EXCEPT PERSONAL CARE PRODUCTS) IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **146/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் உள்நாட்டு இனிப்புகள் அல்லது / மற்றும் வாசனைத் திரவியங்கள் அல்லது / மற்றும் ஆயுர்வேத ஆரோக்கிய உற்பத்திகள் (பிரத்தியேக பராமரிப்பு உற்பத்திகள் இன்றி) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனி நபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் பாதுகாக்கப்பட்ட உடன் உணவுகள், பேக்கரி / உள்நாட்டு இனிப்புவகை உற்பத்திகள் மற்றும் பானங்கள் (மதுசாரமற்ற) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A SHOP FOR PRESERVED INSTANT FOOD, BAKERY/ LOCAL CONFECTIONERY PRODUCTS & BEVERAGES (NON ALCOHOLIC) IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **147/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல நடைபாதையில் பாதுகாக்கப்பட்ட உடன் உணவுகள், பேக்கரி / உள்நாட்டு இனிப்புவகை உற்பத்திகள் மற்றும் பானங்கள் (மதுசாரமற்ற) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் மினி சுப்பர் மார்க்கெட் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A MINI SUPER MARKET IN THE DEPARTURE PUBLIC CONCOURSE AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **148/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் மினி சுப்பர் மார்க்கெட் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனி நபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் பதப்படுத்தப்பட்ட உள்நாட்டு பழங்கள் மற்றும் மரக்கறிகளுக்கான கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A SHOP FOR PROCESSED LOCAL FRUITS & VEGETABLES IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **149/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் பதப்படுத்தப்பட்ட உள்நாட்டு பழங்கள் மற்றும் மரக்கறிகளுக்கான கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் யுனிசெக்ஸ் அலங்கார நிலையம் அல்லது / மற்றும் ஸ்பா ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A UNISEX BEAUTY SALON AND/OR SPA IN THE DEPARTURE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **150/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புறப்படுதல் நடைபாதையில் யுனிசெக்ஸ் அலங்கார நிலையம் அல்லது / மற்றும் ஸ்பா ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொதுவான வருகை பகுதியில் (மெசனைன் பிரதேசம்) உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**( NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A RESTAURANT AT ARRIVAL PUBLIC CONCOURSE (MEZZANINE AREA) AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். 151/T/2023

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொதுவான வருகை பகுதியில் (மெசனைன் பிரதேசம்) உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக முறையான வர்த்தகப் பதிவு மற்றும் நல்ல அனுபவம் மற்றும் களங்கமற்ற வர்த்தக நற்பெயரரைக் கொண்ட கீர்த்தி வாய்ந்த உணவு வழங்குநர்கள் / ஹோட்டல் உரிமையாளர்கள் / உணவக இயக்குநர்களிமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வருகை நடைபாதையில் உணவுக் கடை ஒன்றை நடாத்திச் செல்வ-தற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A FOOD OUTLET AT ARRIVAL WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **152/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வருகை நடைபாதையில் உணவுக் கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக முறையான வர்த்தகப் பதிவு மற்றும் நல்ல அனுபவம் மற்றும் கலங்கமற்ற வர்த்தக நற்பெயரைக் கொண்ட கீர்த்திவாய்ந்த உணவு வழங்குநர்கள் / ஹோட்டல் உரிமையாளர்கள் / உணவக இயக்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பொதுவான வருகை பகுதியில் (லொபி) புதிய மலர்களுக்கான கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A SHOP FOR FRESH FLOWERS AT ARRIVAL PUBLIC CONCOURSE (LOBBY) AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

விலைக்கோரல் இலக்கம். **134/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் பொதுவான வருகை பகுதியில் (லொபி) புதிய மலர்களுக்கான கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனி நபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தற்போது வருகை லொபி, வருகை நடைபாதை, புறப்படுதல் நடைபாதை, புறப்படுதல் லொபி பகுதியில் ஒரு கடையை நடாத்தி வரும் எந்தவொரு நடத்துநரிடமிருந்தும் எந்தவொரு விலைமனுக்களையும் பெற்றுக்கொள்ள நிறுவனம் கவனத்திற் கொள்ளாது. இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் என்பன இயைபுடைய கேள்விக்கான விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த விலைக்கோரல் ஆவணங்களை 2024 பெப்ரவரி 13ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பத்து மற்றும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அறை இல. 31, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 134/T/2023 | ரூபா 3,500.00 |
| 143/T/2023 | ரூபா 12,500.00 |
| 144/T/2023 | ரூபா 15,000.00 |
| 145/T/2023 | ரூபா 5,000.00 |
| 146/T/2023 | ரூபா 15,000.00 |
| 147/T/2023 | ரூபா 5,000.00 |
| 148/T/2023 | ரூபா 15,000.00 |
| 149/T/2023 | ரூபா 5,000.00 |
| 150/T/2023 | ரூபா 5,000.00 |
| 151/T/2023 | ரூபா 7,500.00 |
| 152/T/2023 | ரூபா 5,000.00 |

விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு கடைக்காகவும் இயைபுடைய விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறி விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயல்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணை முறியாக அல்லது ரொக்கப் பணமாக முன்வைக்கலாம்.

விலைக்கோரல்களை முன்வைப்பது தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2024 பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், வர்த்தகம் மற்றும் ஆதனப் பிரிவில் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து அமைவிட விஜயம் இடம்பெறும்.

விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அலை இல. 31, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து 011-2264000, 011-2264005 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 05

## குறள் தரும் சிந்தனை



ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு

*கையை மடக்கிக் கன்னத்தில் ஒரு குத்துவிடுகின்ற முரடர்களுக்குக் கொடுப்பார்களேயல்லாமல், ஈ.கைக் குணமில்லாத கயவர்கள் ஏழை எளியோருக்காகத் தமது எச்சில் கைகைக் கூட உதற மாட்டார்கள்.*

# நாட்டின் முன்னேற்றத்துக்கு தேசிய நல்லிணக்கமே அவசியம்

இலங்கையின் தேசிய நல்லிணக்க தைப் பொங்கல் விழா இம்முறை யாழ்குடாநாட்டில் நடைபெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இத்தேசிய வைபவத்தில் பிரதம அதிதியாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜேதாச கலந்து கொண்டார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலின் இத்தேசிய வைபவம் இந்து சமயப் பாரம்பரியங்களில் அடிப்படையில் இடம்பெற்றதோடு முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இத்தேசிய வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, 'நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் நாடொன்றை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் இன்றியமையாததாகும். பல்லின மக்கள் வாழும் நாடொன்றில் தேசிய நல்லிணக்கம் காணப்படாவிட்டால் அந்நாடு முன்னேற்றப்பாதையில் செல்வது மிகவும் சிரமமான காரியமாக இருக்கும்.

அந்த வகையில் அற்ப அரசியல் நலன்களை முன்னிறுத்தி கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களில் காணப்பட்ட தவறுகள் மற்றும் பிழைகளின் விளைவாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அதன் விளைவாக மக்கள் பலவிதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளானார்கள். இந்நெருக்கடி அரசியலிலும் கொதிநிலையை தோற்றுவித்தது. அதன் விளைவாக அன்றைய பிரதமரும் அரசாங்கமும் பதவி விலகும் நிலை உருவானது. அந்த நிலையில் அன்றைய ஜனாதிபதியும் கூட சொற்ப காலத்தில் பதவி விலகினார்.

இந்த நிலையில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத இக்கட்டான சூழல் உருவானது. அந்த நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றார். அவர் நாட்டின் தலைமையை ஏற்றதோடு நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை பரந்த அடிப்படையில் ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் பயனளிக்கத் தொடங்கின. அதன் விளைவாக நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின. பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் மக்கள் முகம் கொடுத்த நெருக்கடிகளும் பாதிப்புக்களும் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஆனாலும் அந்த நெருக்கடியின் தாக்கங்கள் நிலவவே செய்கின்றன.

நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்வதற்குரிய வேலைத்திட்டங்கள் தொடராக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பயனாக தற்போது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. என்றாலும் நாட்டில் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் வலுவான நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த நல்லிணக்கம் வலுப்படுத்தப்பட வேண்டும். அதன் ஊடாக நாட்டை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்.

பல்லின மக்கள் வாழும் எந்தவொரு நாட்டினதும் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறான நல்லிணக்கத்தைக் கொண்டுள்ள நாடுகளும் மக்களும் தான் பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதேநேரம் அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ளும் நோக்கில் கடந்த காலங்களில் சிலர் முன்னெடுத்த தவறானதும் பிழையானதுமான கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களின் விளைவாகவே நாடு பலவித நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் நிலைமைக்கு உள்ளானது. பல்லின மக்கள் வாழும் இலங்கையைத் தொடர்ந்தும் முன்றே்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் மிகவும் அவசியம். அதனையே நீதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இவ்விடயம் பல மட்டங்களிலும் உணரப்பட்டுள்ளளது.

அதற்கேற்ப நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். எந்த நாளும் மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவும் இருக்க முடியாது. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தேசிய நல்லிணக்கத்திற்காக முன்னெடுக்கப்டும் வேலைத்திட்டங்களுகக்கு ஆதரவலும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தை உண்மையாக விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# அவுஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்கள் பங்கேற்ற பொங்கல் விழா

## சிட்னியில் கோலாகல நிகழ்வு

தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா அவுஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்களுடன் இணைந்து சிறப்புற சிட்னியில் நடைபெற்றது.

நியு சவுத்வேல்ஸ் மாநில தமிழ் மக்கள் சார்பாக, அனைத்து தமிழ் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு பொங்கல் திருவிழா நிகழ்வு சிறப்புற Holroyd Gardens, Merrylands, எனும் பூந்தோட்டத்தில் நடைபெற்றது.

இப்பொங்கல் நிகழ்வானது, உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர் தமிழர்கள் தமிழ்மொழியால், தமிழ் இன உணர்வால், தமிழ்ப் பண்பாட்டால் தன்னார்வமாக ஒன்றுகூடும் நிகழ்வாக மிகச்சிறப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

கூட்டுப் பொங்கல் நிகழ்வில் கோலப் போட்டி, வீட்டு விலங்குகள் காட்சிப்படுத்தல் (Animal Farm) மற்றும் சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்வு (Jumping Castle), தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விளையாட்டுகள், பழம் பொறுக்குதல், இசை நாற்காலி, தடை ஓட்டம், உரி அடித்தல் (முட்டி உடைத்தல்), சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம், கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கபடி போன்றவை, சிறிய அளவிலான மத்தாப்புக் காட்சி (Miniature Fireworks) போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



இந்நிகழ்வில் இளையோர்கள் மற்றும் பெரியவர்கள் பங்குகொண்ட பொங்கல் நடனங்கள் உட்பட விசேட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அத்முடன் இந்நிகழ்ச்சியில் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 2023 இல், தமிழ்மொழியில் சித்தியடைந்த உயர்தர (HSC) மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# மலையகத்தில் கடும் பனிப்பொழிவினால் மக்கள் அவதி; மரக்கறிச் செய்கை பாதிப்பு

மலையகத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக பசறை, படல்கும்புர பிரதேச செயலகத்திற்குட்பட்ட வரடோல கிராமத்தின் நீரேந்து பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இம்மண்சரிவு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன் காரணமாக இப்பிரதேசத்தில் மூன்று தோட்ட வீடுகள் முற்றாக மண்மேடுகளால் மூடப்பட்டுள்ளன. இத்தோட்டத்தில்12 குடும்பங்கள் வசிக்கும் வரிசை வீடுகளும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர இப்பிரதேசத்தில் சுமார் 30 ஏக்கர் வயல் நிலம் மண்சரிவினால் தாழிறங்கியுள்ளதாகவும், அப்பகுதியில் அவ்வப்போது பெய்யும் மழையினால் கிராம மக்கள் இருப்பிடத்துக்குச் செல்ல தயங்குவதாகவும் படல்கும்புற பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட மக்களுக்குத் தேவையான நலன்புரி விடயங்களை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மண்சரிவினால் இடம்பெயர்ந்த 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் வரதொல பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த மண்சரிவினால் 3 வீடுகள், பல காய்கறி தோட்டங்கள், பப்பாளி, பலா, வாழை, மிளகு உள்ளிட்ட விளை பொருட்கள், பல ஏக்கர் வயல் நிலங்கள் மண் மற்றும் கற்களால் மூடப்பட்டுள்ளதாக மொனராகலை அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.



சீரற்ற காலநிலை காரணமாக மலையகத்தின் ஊவா மாகாண தோட்டம் மற்றும் நகரப் பிரதேசங்களில் மழையுடன் கூடிய கடும் குளிரும் பனிப்பொழிவும் நிலவுவதால் தோட்டங்களில் வேலை செய்து வரும் தோட்டத் தொழிலாளிகளும் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் ஏனைய தொழில் செய்பவர்களும் வெகுவாக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக ஏற்பட்ட வரும் கடும் பனிப்பொழிவினால் மலையகத்தில் விளையும் மரக்கறி வகைகளிலும் தேயிலைச் செடிகளிலும் ஒரு வகை கரும்புள்ளிகள் தோன்றி இலைவாடல் நோய் ஏற்பட்டு வருவதாக விவசாயிகளும்,தேயிலைப் பயிர் செய்வோரும் கவலை தெரிவித்துள்ளனர். இது தவிர பகல் வேளையிலும் மலையக வீதிகளில் செல்லும் வாகனங்கள் பனிமூட்டம் காரணமாக மஞ்சள் நிற வெளிச்ச விளக்குகளுடன் செல்வதை அவதானிக்க முடிகிறது.





மலையகத்தின் பல பிரதேசங்களில் இரவு நேரம் கடும் குளிரும் அதிகாலை பனிப்பொழிவும் ஏற்பட்டு வருவதால் காலையில் பாடசாலை செல்லும் மாணவகள், ஆசிரியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளிகள் உட்பட பலரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடும் குளிர் காரணமாக கைகால் விறைப்பு ஏற்பட்டு தோல் வெடிப்புக்களும் ஏற்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

**எம்.ஏ.எம்.ஹசனார்...**
*(ஊவா சுழற்சி நிருபர்)*

## இரண்டாம் மொழி சிங்களம் நிகழ்ச்சித் திட்டம்;

# அக்கரைப்பற்று கல்விவலய அதிகாரிகள், அதிபர் ஆகியோருக்கு நினைவு முத்திரை வெளியீடு

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று சங்கணிச்சீமை அல்கமர் வித்தியாலய முன்னாள் அதிபர் எச். தாலிப் ஆகியோரின் பணியைப் பாராட்டி தபால் திணைக்களத்தின் கீழியங்கும் முத்திரைப் பணியகத்தினால் ரூபா 25 பெறுமதியான நினைவு முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் சிற்றி பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட இரண்டாம் மொழி சிங்களம் நிகழ்ச்சித் திட்டத்தில், அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள அல்கமர் வித்தியாலய மாணவி எம்.எம். அல்மா ஷைனப் மற்றும் அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலய மாணவன் ஏ.எச். உமர் ஹாமித் ஆகியோர் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு, இந்தியா செல்வதற்கான புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இப்பணிக்கு அர்ப்பணிப்பான சேவை வழங்கிய அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று இசங்கணிச்சீமை அல்கமர் வித்தியாலய முன்னாள் அதிபர் (ஓய்வு) எச்.தாலிப் ஆகியோருக்கே தபால் திணைக்களத்தினால் ரூபா 25 பெறுமதியான நினைவு முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் றஹ்மத்துல்லாஹ் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அகமட் கியாஸ் ஆகியோருக்கான நினைவு முத்திரை கையளிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.



இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய பாடசாலை ஆசிரியை எம்.எஸ்.எப்.பஸ்லீனாவுக்கு கல்வி அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

"அக்கரைப்பற்று கல்வி வலயம் கடந்த காலத்தில் தேசிய ரீதியில், மாகாண மட்டத்தில் பல வெற்றிகள், சாதனைகளைச் சந்தித்துள்ளது. இதற்கு நாங்கள் பேதங்களின்றி ஒரு குடும்பமாக, கூட்டுப் பொறுப்புடன் தொழிற்பட்டமையே பிரதான காரணமாகும். தற்பொழுது தேசியரீதியில் முதலாமிடம் என்ற உயர்ந்த இலக்குடன் நாங்கள் மாணவர்களுக்கான எதிர்காலப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்கு கிடைத்துள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க இவ்வெற்றி போன்று, எதிர்காலத்திலும் மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்டி, முத்திரை பதிப்பர். அதற்கான உதவி, ஒத்துழைப்பினை கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் வழங்கி வருகின்றனர்" என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கருத்துத் தெரிவித்தார்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*




# திருவள்ளுவரையும் விட்டு வைக்காத அரசியல்வாதிகள்!

திருவள்ளுவர் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்து, ருத்ராட்சம், விபூதி பட்டையுடன் மத சின்ன அடையாளத்துடன் கூடிய புகைப்படத்தை பதிவிட்டு வாழ்த்து கூறியுள்ளார் தமிழக பா.ஜ.க மாநிலத்தலைவர் அண்ணாமலை.

தமிழ்நாடு முழுவதிலும் ஜனவரி 16ஆம் நாள் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டுவருகிறது. பல தலைவர்களும் திருவள்ளுவருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தி வருகின்றனர். சனாதனத்துக்கு ஆதரவாக பேசி வரும் ஆளுநர் ஆர். என்.ரவிக்கும் திராவிட மொடல் ஆட்சியை முன்னிறுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கும் மோதல் போக்கு நீட்டித்து வருகிறது.

## காவியுடையினால் உருவான பரபரப்பு!

திருவள்ளுவர் தினத்தில், ஆன்மிக பூமியான தமிழ்நாட்டில் பிறந்த பெரும்புலவரும், சிறந்த தத்துவஞானியும் பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவியுமான திருவள்ளுவருக்கு எனது பணிவான மரியாதையை செலுத்துகிறேன் என்று பதிவிட்டுள்ளார் ஆளுநர் ஆர்.என். ரவி. காவி உடையணிந்த திருவள்ளுவர் புகைப்படத்தை பகிர்ந்து சனாதன துறவி என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளது சர்ச்சையான நிலையில், பா.ஜ.க மாநிலத்தலைவர் அண்ணாமலையின் ட்விட்டர் பதிவும் விவாதப்பொருளாகியுள்ளது.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக இருக்கும் திருவள்ளுவரின் படத்தை வழக்கமான தோற்றத்திலிருந்து மாற்றி காவி உடை தரித்தவராக தமிழ்நாடு பா.ஜ.க முயற்சி செய்துவருகிறது. அதனடிப்படையில் கடந்த 2017ஆம் ஆண்டு சமூக வலைதளங்களில் முதன்முதலாக காவி உடை அணிந்த திருவள்ளுர் படத்தை வெளியிட்டது. இதற்கு கடும் எதிர்ப்புகளும் கிளம்பின. ஆனாலும் தொடர்ந்து பா.ஜ.கவினர் காவி உடை அணிந்த திருவள்ளுவர் படத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு பல அரசியல் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

உலகப் பொதுமறை தந்தவர் வள்ளுவர், அவரையும் குறளையும் வைத்து அரசியல் செய்யாதீர்கள் என பல தரப்பிலிருந்து கண்டனங்கள் எழுந்தன. திருவள்ளுவருக்கு மதச்சாயம் பூசக்கூடாது எனக் கண்டித்தனர். அனைத்துத் தரப்பு மக்களாலும் நாடு, மதம், மொழி, இனம் கடந்து திருக்குறள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று நடுநிலையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் திருவள்ளுவருக்கு காவியுடை அணிவித்ததை பலரும் ஆட்சேபித்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



## வெள்ளத்தினால் பாதிப்புற்றோர் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சம்

# கிழக்கு ஆளுநர், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் நேரில் சென்று ஆராய்வு





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே முரளிதரன் உள்ளிட்டோர் அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.

சித்தாண்டி அலைமகள் வித்தியாலயம், வந்தாறுமூலை கணேசா வித்தியாலயம் ஆகியவற்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிட்டு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

அதுமட்டுமின்றி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களை இக்குழுவினர் பார்வையிட்டதுடன் முகாம்களில் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து அவற்றை உடன் தீர்த்து வைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினர். இவ்விஜயத்தின் போது இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உலர் உணவுப்பொருட்களை ஆளுநரும், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனும் இணைந்து வழங்கி வைத்தனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் நிவாரண பொதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவ்விஜயத்தின் போது ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம், ஏறாவூர்பற்று பிரதேச சபை செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.





அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை முஷாரப் எம்.பி நேரில் சென்று சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார். இவ்விஜயத்தின் போது மக்கள் தங்களுடைய பிரச்சினைகளை முஷாரப் எம்.பியிடம் முன்வைத்ததுடன் தன்னால் முடிந்த உதவிகளை செய்து தருவதாகவும் அவர் உறுதியளித்தார். இவ்விஜயத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளை தலைவர் மௌலவி ஏ.முகைதீன் பாவா ஷர்கி, ஹபீப் மௌலவி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர்உணவுப்பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டன.
(படம்: அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

# வயல் நிலங்களுக்கு வெள்ளத்தால் பாரிய சேதம்

(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக செழிப்பாக காணப்பட்ட வயல் நிலங்கள் பாரியளவில் சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். தற்சமயம் மழை ஓரளவு குறைவடைந்து காலநிலை ஓரளவு சீராகி வருவதை அவதானிக்க முடிகிறது.



மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்கு திரும்பியுள்ளது.

பெரும்பாலான வீதிகளில் வெள்ளம் வடிந்து காணப்பட்டன. இருந்த போதிலும் தாழ் நிலப்பிரதேசங்களில் இன்னமும் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது.

பெரும்பாலான வயல் நிலங்களில் வெள்ளம் இன்னும் இருப்பதால் அதை கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். இம்முறை விளைச்சல் மிகவும் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட

# பாலமுனை பிரதேசத்துக்கு ஹரீஸ் எம்.பி விஜயம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பாலமுனை பிரதேசம் மற்றும் பாதிப்புக்குள்ளான பாடசாலைகளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் நேற்றுமுன்தினம் (15) சென்று பார்வையிட்டார்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா,அதிபர் எம்.ஏ.அபாஹுல்பான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் பாலமுனை தாறுல் ஹஸனாத் வித்தியாலயத்துக்கு தேவையான உதவிகளும் வழங்கப்பட்டன.

# அம்பாறையில் மாபெரும் பட்டத்திருவிழா

(வாச்சிக்குடா விசேட நிருபர்)

அம்பாறை விநாயகபுரம் வலம்புரியோன் அமைப்பின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் தினத்தை சிறப்பிக்கும் வகையிலான மாபெரும் பட்டத்திருவிழா மிகவும் பிரமாண்டமான முறையில் நேற்றுமுன்தினம் (15) மாலை விநாயகபுரம் கடற்கரை முற்ற வெளியில் நடைபெற்றது.

வலம்புரியோன் அமைப்பின் தலைவர் வி.ஜெயகாந்தன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பட்டம் விடும் போட்டி, ஆண்களுக்கான கயிறுழுத்தல், பெண்களுக்கான சங்கீதக்கதிரை மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளுடன் இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பு நிகழ்வாக நடைபெற்றது. வண்ணமயமாக மாறிய வித்தியாசமான பட்டங்களை வானில் பறக்கவிட்டதுடன் அது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.



இதேநேரம் இன்னிசை நிகழ்வும் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதில் உள்ளூர் வெளியூர் கலைஞர்களும் பங்கேற்று பல பாடல்களை பாடி அனைவரையும் உற்சாகப்படுத்தினர்.

கயிறு இழுத்தல் , பெண்கள், சிறுவர்களுக்கான போட்டிகளும் நடைபெற்றன.

பட்டம் விடும் போட்டியில் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெற்றவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்தை பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டதுடன் 7 ஆறுதல் பரிசில்களும் ஏனைய போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



ஓட்டமாவடியை பிறப்பிடமாகவும், அளுத்கம பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முஹம்மது அபூபக்கர் முஹம்மது நிப்ராஸ் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் வாழைச்சேனை மாவட்ட/ நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவர் தனது ஆரம்ப கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை மட்/மம/ஓட்டமாவடி தேசிய பாடசாலையிலும், தனது பட்டப்படிப்பை இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

இதுதவிர HNDE மற்றும் *HND in Trilingual Studies* பாடநெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார். தற்போது நீதி அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார பணியாளர்கள் வேலைநிறுத்த போராட்டம்

## வைத்திய சேவைகள் முற்றாக பாதிப்பு



(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

சுகாதார ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட வேலை நிறுத்த போராட்டம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலையாக இது விளங்குகின்றது.

சுகாதார ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டமையால் மக்கள் கதிரியக்க பிரிவு, ஆய்வுக் கூட தொழில்நுட்ப பிரிவு, மருந்து வழங்கல் பிரிவு,உட்பட அனைத்து வைத்திய சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. தூர இடங்களிலிருந்து வைத்திய சேவைக்காக வந்த பலர் திரும்பிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

# காத்தான்குடி மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி மத்திய கல்லூரியின் 1986 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பு பழைய மாணவர்களின் 2023ஆம் ஆண்டுக்கான ஒன்றுகூடல் அண்மையில் பாலமுனையில் நடைபெற்றது.

இக்குழுவின் தலைவர் பொறியியலாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடலில் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் ஒன்று கூடலில் பழைய மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும்



போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதன்போது கல்வி அடைவுகளை பெற்ற பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சவளகடை கமநலச்சேவை நிலையத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்செய்கை அறுவடைக்கு தயாராகிவருவதை காண முடிகிறது. வெள்ளத்தினால் தாழ்நில வேளாண்மை அழிவுற்ற நிலையில் எஞ்சிய நெற்பயிர்செய்கையை அறுவடை செய்ய வேண்டுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் பாரிய விபத்து; நால்வர் படுகாயம், சாரதி கைது

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாகவுள்ள நாற்சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆடம்பர காரொன்று தரித்து நின்ற முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியை நோக்கி சென்ற கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் இவ்விபத்து இடம்பெற்றதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர் .

முச்சக்கர வண்டி சாரதி மற்றும்



அதில் பயணம் செய்த பயணிகள் உள்ளடங்கலாக நால்வர் காயமடைந்துள்ளனர்.கார் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பொலிஸ் உபதேச குழுவின் இவ்வாண்டுக்கான முதலாவது மாவட்ட குழுக்கூட்டம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பொலிஸ் உபதேச குழுவின் இவ்வாண்டுக்கான முதலாவது மாவட்ட குழுக்கூட்டம் அண்மையில் அம்பாறையில் நடைபெற்றது.

அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜெயபத்ம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்தில் பிரதேசரீதியாக காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றை கண்டறியவும் அதற்கான தீர்வுகளை பொலிஸ் அத்தியட்சகர் இக்கூட்டத்தின் போது முன்மொழிந்தார்.

இந்நிகழ்வின் பங்காளர் அமைப்பான கெப்சோ (GAFSO) நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் உட்பட அம்பாறை மாவட்டத்திலுள்ள 23 பொலிஸ் நிலையங்களின் உள்ள உபதேச குழு உறுப்பினர்கள், சமூக பொலிஸ் சேவை பிரிவின் பொறுப்பதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தோப்பூர் நெற்களஞ்சியசாலையை புனரமைக்குமாறு கோரிக்கை



(தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தோப்பூர் நெற்களஞ்சியசாலை நீண்டகாலமாக புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் உத்தரவாத விலைக்கு நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெற்களஞ்சியசாலையானது முன்னையகாலங்களில் சிறப்பாக செயற்பட்டு வந்ததாகவும் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக நெற்களஞ்சியசாலை சேதமடைந்து எவ்வித பயன்பாடும் இன்றி காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை புனரமைத்து மீளவும் நெற்களஞ்சியசாலையை தோப்பூரில் செயற்படுத்துமாறு விவசாயிகள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அரச நிர்வாகத்தில் முடிவுகள் எடுப்பது நினைப்பது போல் எளிதானதல்ல

## அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

அம்பாறைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று (15) பிற்பகல் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அம்பாறை டிப்போவில் கண்காணிப்பு விஜயமொன்றில் ஈடுபட்டார். அங்கு ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் டிப்போவில் உள்ள குறைபாடுகள் குறித்து அமைச்சர் பார்வையிட்டதுடன், ஊழியர்களுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். டயர்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை குறித்தும், செயலிழந்த பஸ்வண்டிகளை மீட்டெடுக்க சில புதிய என்ஜின்கள் தேவை என்றும் அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். மேலும் வாங்கப்பட்ட சில உதிரிப்பாகங்களின் தரத்தில் சிக்கல் இருப்பதாகவும் கூறப்பட்டது. இதன்போது இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர், உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதுபற்றி அவதானித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

டிப்போவுக்குச் சொந்தமான காணியில் பயன்படுத்தப்படாத ஒரு பகுதியை வருமானம் ஈட்டும் வகையில் தனியாருடன் இணைந்து அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நான், இந்த அமைச்சை பொறுப்பேற்ற போது டிப்போக்களின் சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அனைத்து டிப்போக்களும் நல்ல நிலையில் உள்ளதால், புதிய பஸ்வண்டிகள் பல டிப்போக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த பொருளாதார மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியில், இயந்திரங்களைப் பெறுவதற்கு அந்நிய செலாவணி இல்லை. ஆனால் இந்த ஆண்டில் அவை கையகப்படுத்தப்பட்டு தொலை தூரப் பயணங்களுக்காக டிப்போக்களுக்கு பல புதிய பஸ்வண்டிகள வழங்கப்படும், மேலும் 2025 ஆம் ஆண்டில் டிப்போ திறமையான மற்றும் லாபகரமான டிப்போவாக மாற்றப்படும். பொலன்னறுவை டிப்போ கடந்த வருடம் சிறந்த டிப்போவாக மாறியது. அனுராதபுரம் மாவட்டம் சிறந்த நிர்வாக மாவட்டமாக உருவெடுத்துள்ளது. அம்பாறையும் அந்த நிலையை அடையலாம்.



ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார். கேள்வி உதிரிப்பாகங்களை வாங்குவதற்கான முறையான அமைப்பை நடைமுறைப்படுத்த விரும்புகிறீர்களா?

அமைச்சர் முறையான அமைப்பு உள்ளது. காலங்காலமாக நடைமுறையில் இருந்த முறையை மாற்றி புதிய முறையை அறிமுகப்படுத்தி, டெண்டர் கோரப்பட்டு, இ.போ.ச வில் டயர்களை பெற்று, முந்தைய விலையை விட 9000 ரூபாய் குறைவான விலையில் டயர்களை பெற்றுள்ளோம். எனவே, அதற்கான அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

புதிய டிக்கெட்டுகளுக்கான இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதில் தாமதம் ஏன்? அமைச்சர் அரசு நிர்வாகத்தில் நாம் நினைப்பது போல் எளிதில் முடிவுகளை எடுக்க முடியாது. கமிட்டிகளின் முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு சிலவற்றைச் செய்ய முடியாமல் போனது உண்டு. தற்போது, நூற்றுக்கணக்கான பஸ்கள் கொண்டு வந்து, ஓராண்டு ஆகியும், இதுவரை கட்டணம் செலுத்தி, வீதியில் போடவில்லை. அரச நிர்வாகத்தில், அரசாங்கம் விரும்பியதை மட்டும் செய்ய முடியாது. அவற்றில் உள்ள விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளின்படி நீங்கள் செயல்பட வேண்டும். எனவே, அவர்களின் தாமதத்தை அகற்றுவது அவசியம்.

ஒவ்வொரு முறையும் அந்த சிறப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்போது, நாம் ஊடகங்களுடன் வெவ்வேறு போராட்டத்தை நடத்த வேண்டும் என்றார்.

## இன்றைய பலன்கள்

### ( 17. 01. 2024 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சி கைகூடும். வளர்ச்சி அதிகரிக்கும். வாய்ப்புகள் வாசல் தேடி வரும்.

**ரிஷபம்:** முன்னேற்றம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் லாபம் ஒரு புறம் வந்து கொண்டே இருக்கும். மற்றும் ஒரு புறம் விரையமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**கடகம்:** இடமாற்றம் வீடு மாற்றம் எதிர்பார்த்தபடி அமையும் நேரம் இது. பலவித மாற்றங்கள் ஏற்படும். 10ல் குரு பதிவதால் பதவியில் மாற்றம் உண்டு

**சிம்மம்:** ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை செலுத்துவது நல்லது. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கு ஏற்ப நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

**கன்னி:** வருமானம் திருப்திகரமாக இருக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைப்பது அரிது. கூடிய உழைப்பும் குறைந்த ஊதியமும் இருக்கும்

**துலாம்:** சகோதரர்கள் மூலம் ஒரு சில நல்ல காரியங்கள் நடைபெறும். தொழில் உத்தியோகத்தில் ஏற்பட்ட குறுக்கீடுகள் அகலும்.

**விருச்சிகம்:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்தடைந்து லாபம் அதிகரிக்கும்.

**தனுசு:** நம்பிக்கை கூறிய நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். தடை கற்கள் படிப்பிற்காக மாறும்.

**மகரம்:** ஆரோக்கியத்தில் மட்டும் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலம் குடும்பச் சுமை கொஞ்சம் கூடும்.

**கும்பம்:** ஏற்ற இறக்க நிலை உருவாகலாம். இது யோகமான நேரம். உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**மீனம்:** இந்த நேரத்தில் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள்.

## இலங்கையின் புதுப்பிக்கத்தக்க...

தெரிவித்தார். இவ்வாறான முதலீடுகளுக்கு முன்வரும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறை முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் உயர் மட்ட மற்றும் நிலையான கொள்கையை உத்தரவாதம் செய்யும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுவிஸ்லாந்தின் டாவோஸ் நகரில் நேற்று (15) இடம்பெற்ற “பசுமை தொழில்நுட்ப மன்றத்தில்” (Green Tech Forum) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இதனை சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்தது.'எரிசக்தியால் பாதுகாப்பான இலங்கைக்கு வழி வகுத்தல்'என்ற தொனிப் பொருளில் இங்கு உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

இந்த விரிவுரையை வழங்க என்னை அழைத்த சுவிஸ் ஆசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் இந்நிகழ்வின் அனைத்து ஏற்பாட்டாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். காலநிலை மாற்றத்தைத் தணிக்க உலகளாவிய நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு அர்ப்பணிப்புகளைச் செய்த பல உலகளாவிய மன்றங்கள் உள்ளன. இருப்பினும், இதற்காக அர்ப்பணிப்பதை விட செயற்படுவது குறைந்த மட்டத்திலேயே உள்ளது. உலகளாவிய தலைமைத்துவத்தில் ஏற்பட்ட இத்தோல்வியின் விளைவுகளை பெரும்பாலும் பூகோள தெற்கின் வளர்ந்து வரும் நாடுகளுக்கு சுமக்க நேரிடுகிறது.

பொதுவான காலத்தை விட வரட்சி, நீண்ட காலம் நீடித்து விவசாய உற்பத்திக்கு இடையூறு விளைவிக்கும் போது, நமது உணவுப் பாதுகாப்பு ஆபத்தில் தள்ளப்படுகிறது. மேலும், தாமதமான பருவமழை காரணமாக நீர்மின் உற்பத்தி தடைப்படுகையில், வலுசக்திக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

வரட்சி, வெள்ளம் நிலைமைகள் சாதாரண மக்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் சீர்குலைக்கிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அசாதாரணமானது என்பது இதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிகிறது.

காலநிலை நீதி தொடர்பான பிரச்சினையைப் போன்று, இதனை தணிப்பதிலும் பூகோள தெற்கின் நாடுகள், பொருளாதா பங்களிப்புச் செய்வதன் அவசியத்தையும் இது காட்டுகிறது.

காலநிலை மாற்றத்தைத் தணிக்க இலங்கை உறுதிபூண்டுள்ளது என்பதை வலியுறுத்த வேண்டும். டுபாயில் நடைபெற்ற COP28 மாநாட்டில் "வெப்பமண்டல முன்முயற்சி" ஆரம்பிக்கப்பட்டது. இது வெப்பமண்டல நாடுகளில் காடுகள், வலுசக்தி, சமுத்திரம் மற்றும் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் திட்டத்தை உருவாக்குகிறது.

அத்தகைய முயற்சிகளின் ஒரு முக்கிய அங்கமான, புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நமது முயற்சிகளுக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான நீண்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். சுதந்திரத்திற்குப் பிறகு, இலங்கை நீர்மின் உற்பத்தியில் விரிவான வலையமைப்பை உருவாக்கியது. 1950 இல், முதல் பாரிய நீர்மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இது நான்கு நீர்த்தேக்கங்களைக் கொண்டுள்ளது. அதன் பின்னர் நாட்டின் ஆற்றல் தேவைக்காக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தோம். இவ்வாறு ஐந்து பிரதான நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டு ஆறாவது நீர்த்தேக்கமாக, வளவே கங்கை திட்டம் இணைக்கப்பட்டது. மகாவலி கங்கைத் திட்டத்தின் இறுதிக் கட்டம் ஏழு வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. இதனால், நீர்மின்சாரத்திற்கு கிடைக்கும் மூலங்களைப் பயன்படுத்தியுள்ளோம்.

இன்றும், இலங்கையின் மின்சார உற்பத்தித் திறனில் சுமார் 40% நீர்மின்சாரமாகும். நீர் மின்சாரம் உகந்த அளவில் பயன்படுத்தப்பட்டதால், காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தியை தேசிய மின் கட்டமைப்பில் ஒருங்கிணைக்க அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மின்சாரத் தேவையில் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் தற்போது இந்த செயல்முறையை துரிதப்படுத்தியுள்ளது. இந்த இலக்கை அடைய 11.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை தேவைப்படுகிறது. இருப்பினும், அண்மைக் காலம் வரை, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் தனியார் துறை முதலீட்டிற்கான கட்டமைப்பு மிகவும் சாதகமாக இல்லை என்றார்.

## TV கலந்துரையாடல் இன்று...

நந்தலால் வீரசிங்க தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பிலான விசேட கலந்துரையாடல் இன்றிரவு 10 மணிக்கு தேசிய தொலைக்காட்சியின் பொதுமக்கள் தின நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இந்த விசேட நிகழ்ச்சியில் ரங்கன செனவிரத்ன, விஜய மாபா ஜயசிங்க, நிலங்க மல்ஷான் ஆகியோரும் இணைந்து கொள்ளவுள்ளனர். மத்திய வங்கி ஆளுநரின் இந்த சர்ச்சைக்குரிய கருத்துக்கு மேலதிகமாக, நிதி தொடர்பான முழு அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது, அந்த வகையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தை தவிர வேறு வழியில்லை என்பது தொடர்பில் இந்த நிகழ்வில் கலந்துரையாடப்படவுள்ளது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளின்படி தற்போதைய அரசாங்கம் அல்ல இந்த நாட்டை யார் ஆண்டாலும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கடந்த 10ஆம் திகதி இவ்வருடத்திற்கான நிதிக் கொள்கை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள் குறுகிய காலத்துக்குரியவையல்ல, பத்து வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக நீடிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்திருந்தார். மத்திய வங்கியின் ஆளுநரின் இக்கருத்து தொடர்பாக அண்மையில் பாராளுமன்றத்தில் மூன்று நாள் விவாதம் நடத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் அமைச்சர்பந்துல குணவர்தன கேட்டுக்கொண்டார்.

அந்த அறிக்கை தொடர்பில் தேசிய ரீதியில் விரிவான உரையாடலை உருவாக்குவது மிகவும் முக்கியமானது எனவும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் இந்த அறிக்கை தொடர்பில் மூன்று நாள் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இந்தக் கோரிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இவ்வருடமும் ஏமாற்றினால்...

மேலும் தெரிவித்ததாவது: உலகத் தமிழர்கள் அனைவருக்கும் ஐபிசி தமிழின் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள். “தமிழ்பேசும் மக்கள் தமது தாயகமான வடக்கு கிழக்கில் சுதந்திரமாக வாழும் வகையில் நியாயமான நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். தமிழர்களின் தலைவிதியை அவர்களே நிர்ணயிக்கக்கூடிய நிலைமை வடக்கு கிழக்கில் ஏற்பட வேண்டும். எனவே, இவ்வருட தைப்பொங்கல் தமிழர்களுக்கு அதிமுக்கியமான பொங்கல். இந்த வருடமும் இலங்கை அரசு எம்மை ஏமாற்றினால் விளைவுகள் வேறு விதமாக அமையலாம்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு நியாயமான நிரந்தர அரசியல் தீர்வு எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும் இந்த நன்னாளில் பிரார்த்தனை செய்கிறேன். இது தவிரவும் இலங்கையில் நீண்ட காலமாகத் தேசிய இனப்பிரச்சினை தொடர்கிறது. இன்னமும் அரசியல் தீர்வு காணப்படவில்லை. சிங்கள மக்களுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் இடையில் அரசியல் சாசனம் ரீதியாக எந்தவொரு இணக்கப்பாடும் இதுவரை ஏற்படவில்லை.

இது சம்பந்தமாக கடந்த காலங்களில் பல பேச்சுவார்த்தைகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெற்றன. இப் பேச்சுகளுக்கு தமிழ்த் தரப்பினர் ஒத்துழைப்புக்களை வழங்கிய போதிலும் ஆட்சியிலிருந்த அரசுகள் தீர்வை வழங்க முன்வரவில்லை, இந்த நிலைமை இனியும் தொடர இடமளிக்க முடியாது என்றார்.

## முச்சக்கர வண்டி தொழில்துறை:...

மிக விரைவில் புதிய, கிவ் ஆர் கோட் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வண்டி தொழில் துறையினரின் கவுன்சில் ஒன்றை உருவாக்குவதற்காக முதல் கட்டமாக மேற்பார்வை குழு ஒன்றை நியமிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கையின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தேயிலை உரங்களின்...

நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த 2,000 ரூபா உரச்சலுகைகள் அனைத்து தேயிலை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் அனைத்து உர வகைகளும் தேயிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு 9,735 ரூபாவிற்கு வழங்கப்படவுள்ளது.

இந்த உரச்சலுகைகளுக்கு மேலதிகமாக தேவைப்படும் 1,200 மில்லியன் ரூபாவை இலங்கை தேயிலைச் சபை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரக் கட்டணத்திற்கு ஏற்ப...

இவ்விடயத்தை குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "மின்சாரக் கட்டணக் குறைப்புக்கு அமைவாக நீர்க் கட்டணத்தைக் குறைக்கும் வகையில் நீர் கட்டணச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து விலைச் சூத்திரம் வகுக்கப்படும்" எனவும் அமைச்சர் கூறினார்.

## TIN இலக்கத்தை பெற...

வருமானம், வாடகை வருமானம் அல்லது வங்கிகளில் நிலையான வைப்புத்தொகை மூலம் வருடத்திற்கு 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்கள்) கண்டிப்பாக TIN எண்ணை பெற வேண்டும். டின் நம்பரைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. வாகனப் பதிவு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மோட்டார் வாகனத் திணைக்களத்துடன் கணினிகளை இணைக்கவுள்ளன. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலங்கை சுங்கத்துடன் கணனி வலையமைப்பில் செயற்படுவதால், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான சகல தகவல்களையும் திணைக்களம் பெற்றுக் கொள்கிறது.மேலும்,சகல நிறுவனங்களுடனும் வலையமைப்பதன் மூலம் தலைமறைவாக இருக்கும் வரி ஏய்ப்பு செய்பவர்களை அடையாளம் காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளத்தால் பாதிப்புற்ற அம்பாறையை...

சென்ற அமைச்சர் பாதிப்புக்களை பார்வையிட்டதுடன் புனரமைப்பு பணிகளுக்கும் உத்தரவிட்டார்.இங்கு பேசிய அமைச்சர்;

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு ஜனாதிபதியின் தலைமையில் விசேட புனர்வாழ்வு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

## ரியூசன் வகுப்புக்களில் அதிக...

இருப்பினும், தற்போதுள்ள போட்டிகளின் அடிப்படையில் சில ஆசிரியர்கள் இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது பாரதூரமான விடயமாகும். இதனால், பரீட்சைகள் திணைக்களம் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். இதேவேளை, இவ்வருட உயர் தரப் பரீட்சையின் விவசாய பாடத்தின் இரண்டாம் வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட சம்பவம் தொடர்பில், இரண்டு ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளில்...

பிரதேசங்களிலும் இவ்வாறு காற்றின் தரம் குறைவடைந்துள்ளமை தெரியவருவதாக, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சுவாசிப்பதில் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நோயாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்களைக் கொண்ட நோயாளர்களும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டுமென, அவர் கேட்டுள்ளார்.

## பௌத்த மதத்தை... (03ஆம் பக்க தொடர்ச்சி)

*குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி பிரிவு அதிகாரிகளால் பன்னிப்பிட்டியில் வைத்து இந்நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.*

*மகிந்த கொடிதுவாக்கு கடந்த ஜனவரி முதலாம் திகதி எகிப்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்ததுடன், அவர் பல பிரதேசங்களுக்கும் சென்று போதனைகளை முன்னெடுத்து வந்தார். அவரைப் பின்பற்றுபவர்கள் அவருக்கு வணக்கம் செலுத்துவது போன்ற காணொளிகளும் சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன.*

*குறித்த நபரின் போதனைகள் மூலம் புத்தரின் குணாதிசயங்கள் மற்றும் பௌத்த மத போதனைகள் அவமதிக்கப்படுவதாக, பௌத்த மத மகாநாயக்க தேரர்கள் பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் உட்பட பல்வேறு தரப்பினரும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர்.*

*அதற்கிணங்க கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரிடம் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், இது தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்து சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் பெற்றுக்கொண்டனர்.*

## அமெரிக்க தேர்தலிலிருந்து...

கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட உள்ளார். அவரை எதிர்த்து குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் தீவிரமாக களம் இறங்கி உள்ளார். இதற்கிடையில், இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளதாக அறிவித்தார்.அத்துடன், தாம் ஜனாதிபதியாக வந்தால் பல மாற்றங்களை கொண்டுவருவதாகவும் அறிவித்திருந்தார்.இந்நிலையில், தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று விவேக் ராமசாமி அறிவித்து உள்ளார்.

டொனால்டு டிரம்ப் அதிபர் தேர்தலில் போட்டியிட உள்ளதால், தாம் விலகுவதாகவும், அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய உள்ளதாகவும் விவேக் ராமசாமி தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய மக்கள் சக்திக்குள்...

விவகாரங்களில் நாலக கொடஹேவாவின் ஆலோசனைகளுக்கு சஜித் பிரேமதாச முன்னுரிமையளித்து செயற்ப டுவதாக இவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள் ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாசவை வளர்த்தெடுப்பதிலும், கட்சியின் பொருளாதார கொள்கைககளை வகுப்பதிலும் இதுவரை காலமும் முன்னணியில் நின்ற கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா, இரான் விக்ரமரத்ன போன்றோர் புறக்கணிக்கப்படுவதாலே,அதிருப்திகள் உக்கிரமடைந்துள்ளன. இவர்களுக்கு ஆதரவாக கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்களும் குரல் எழுப்புவதுடன், மொட்டுக் கட்சிக்காரர்களுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டாம் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய எம்பிக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், எச்சரிக்கையும் விடுத்துளனர்.

## சிறைச்சாலைகளில் கைதிகளின்...

கோடிக்கும் அதிகமான நிதியை அரசாங்கம் செலவிட நேர்ந்துள்ளதாகவும் அச்செயலணி தெரிவித்துள்ளது. 27 சிறைச்சாலைகளில் 187 மலசலகூடங்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது உபயோகத்திலுள்ள மலசலகூடங்களில் 287 மலசல கூடங்கள் திருத்தப்படவேண்டிய நிலையில் காணப்படுவதாகவும் அச்செயலணி தெரிவித்துள்ளது. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளுக்கு பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், பிணை நிபந்தனைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் பெருமளவிலான சிறைக் கைதிகள் சிறைச்சாலையில் உள்ளனர். சுமார் 1795 கைதிகள் இவ்வாறு உள்ளதாக செயலணி அறிவித்துள்ளது.

## கைதிகள் தப்பியோடியதை...

சமர்ப்பிக்குமாறும் அமைச்சர், அக்குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இக்குழுவின் தலைவராக உச்ச நீதிமன்ற நீதிபதி ஹெக்டர் யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார். குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம். எஸ். பி. சூரியப்பெரும, நீதியமைச்சின் மேலதிக செயலாளர் ஆர். எஸ். ஹப்புகஸ்வத்த, நீதியமைச்சின் மேலதிக செயலாளர் (சட்டம்) பியுமந்தி பீரிஸ், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டி .எம் .சமன் திசாநாயக்க ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து கைதிகள் தப்பிச் சென்றுள்ள சம்பவம் தொடர்பில், விசாரணைகளை மேற்கொண்டு பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையை மூன்று வாரங்களுக்குள் தமக்குப் பெற்றுத் தருமாறு, அமைச்சர் மேற்படி குழுவினரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மலைச்சாரல்

## இரத்தினபுரி மாவட்ட

# இறப்பர் தோட்டங்களில் ஒருவகை பூஞ்சை நோய்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் அண்மையில் நிலவிய காலநிலை மாற்றத்தை தொடர்ந்து இறப்பர் தோட்டங்களில் ஒரு வகையான பூஞ்சை நோய் பரவி வருவதாக, இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறப்பர் மரங்களின் இலைகளில் ஏற்படுகின்ற பூஞ்சையாலேயே இந்த நோய் பரவி வருவதாகவும், அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகும் போது, இறப்பர் மரங்களுக்கு போதியளவான ஒளி கிடைக்காமையால், இந்த பூஞ்சை நோய் பரவி வருவதாக தெரியவந்துள்ளது. கீழ்நாட்டு ஈரவலயத்தில் இறப்பர் செய்கையில் பீடித்துள்ள இந்த நோய் சகல பிரதேசங்களிலுமுள்ள இறப்பர் மரங்களில் பரவி வருவதாகவும், அதிகாரிகள் தெரிவித்தனர்



இறப்பர் தோட்டங்களில் இந்த பூஞ்சை நோய் காணப்படும் பட்சத்தில் உடனடியாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளை சந்தித்து தேவையான உரிய ஆலோசனையை பெற்றுக்கொள்ளுமாறும், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலக அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# மின்சாரம் தாக்கி பாடசாலை ஆசிரியர் பலி

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை பாமஸ்டன் தோட்டத்தின் மரக்கறி தோட்டமொன்றில் மின்சாரம் தாக்கி பாடசாலை ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை பாமஸ்டன் தமிழ் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் பாமஸ்டன் தோட்டத்தை வசிப்பிடமாக கொண்ட 58 வயதுடைய கே.விஸ்வநாதனே சடலமாக மீட்கப்பட்டார்.

மின்சார கம்பியில் சிக்கிய நிலையில் இவர் காணப்பட்டதை அவதானித்த உறவினர்கள், அவரை லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் உயிரிழந்திருந்ததாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலதிக விசாரணையை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காவத்தையில் கசிப்புடன் இரு சந்தேகநபர்கள் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

காவத்தை, கெட்டேதென்ன பிரதேசத்தில் கசிப்பு அடங்கிய 43 போத்தல்களுடன் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

யுக்திய பொலிஸ் விசேட சுற்றிவளைப்பின் ஒரு நடவடிக்கையாக கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இச்சந்தேகநபர்களிடம் சோதனை நடத்தப்பட்டு கசிப்புடன் இவர்களைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 32,000 மில்லிலீற்றர் கசிப்பை கைப்பற்றியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்து தம்மால் முன்னெடுக்கப்படுமெனவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மலையக தியாகி முல்லோயா கோவிந்தனின் நினைவுதினம்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

மலையக தியாகி முல்லோயா கோவிந்தனின் நினைவுதினம் நுவரெலியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் ஜெயக்குமார் உள்ளிட்ட குழுவினரின் ஏற்பாட்டில் நுவரெலியாவிலுள்ள மலையக தியாகிகள் நினைவுதூபியில் இவர் நினைவுகூரப்பட்டார்.

சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தாலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான சங்கரன் விஜயசந்திரன், பிரதி செயலாளர் பத்மநாதன், மலையக தொழிலாளர் முன்னணியின் பிரதி செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பன்விலை ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா



**புசல்லாவை தினகரன் நிருபர்**

கண்டி பன்விலை ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. செல்வ விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிறு ஆரம்பமாகியது.

இரண்டாம் நாள் திருவிழாவான நேற்று முன்தினம் திங்கட்கிழமை புஸ்பாஞ்சலி திருவிழாவும் நேற்று செவ்வாய்க்கிழமை 108 கலசத் திருவிழாவும் நடைபெற்றது. இன்று புதன்கிழமை கற்பூரத் திருவிழா நடைபெறுகிறது.

நாளை (18) காலை திருவிளக்கு திருவிழாவும் நாளை மறுதினம் (19) மாலை குபேர லட்சுமி திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை இலட்சார்ச்சனையும் 21ஆம் திகதி மாலை மாவிளக்கு திருவிழாவும் 22ஆம் திகதி மாம்பழ திருவிழாவும் 23ஆம் திகதி பறவைக்காவடி மற்றும் தீ மிதிப்பு, மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்பட்டு இரவு வேட்டை திருவிழா நடைபெறவுள்ளது. 24ஆம் திகதி சங்காபிஷேகம், பால்குட பவனி, மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்பட்டு மாலை ஸ்ரீவிநாயகப் பெருமான் சித்திர தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். 25ஆம் திகதி தீர்த் தோற்சவம்,கொடியிறக்கமும் நடைபெற்று, இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் பூங்காவன திருவிழாவும் நடைபெறவுள்ளது. 26ஆம் திகதி மாலை வைரவர் மடையுடன் திருவிழா இனிதே நிறைவுறவுள்ளதாக, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இரண்டாம் நாள் திருவிழாவின் போது றக்ஸாவ தோட்டத்தை சேர்ந்த சட்டக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவன் காளிதாஸ் சசிகுமார் கௌரவிக்கப்பட்டார்.

# மலையகத்தில் முதலுதவி சங்க தொண்டர்களுக்கு விருது



**சாவகச்சேரி விசேட நிருபர்**

மலையகத்தில் இலங்கை முதலுதவிச் சங்க தொண்டர்கள் அண்மையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் 18ஆவது வருட பூர்த்தியும் அறநெறி எழுச்சி நிகழ்வு மற்றும் மலையகம் 200 ஆன்மிக கௌரவம் நிகழ்வின் போதே, அவர்கள் விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது, இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் சாமஸ்ரீ தேசகீர்த்தி வை.மோகனதாஸ், அதி உயர் விருதான ஸ்ரீசைவ ருத்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.







# நிதிபொருளாதார நிலைப்பாடு தேசிய கொள்கைகள் அமைச்சு உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## உணவக சேவை நடத்தி செல்வதற்கான விலைமனுக்கோரல் - 2024

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமையகத்தின் உணவக சேவையை நடத்திச் செல்வதற்கு அவ்வேலைக்காக பதிவுசெய்துள்ள அனுபவமுள்ள உணவக சேவையை நடத்திச்செல்போரிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் 2024.02.08 மு.ப. 11.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும். 2024.03.01 முதல் உணவகத்தின் சேவைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

01. கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையின் அமைந்துள்ள 15 மாடி கொண்ட தலைமையகத்தின் உணவகத்தின் மூலம் ஒருநாளைக்கு இரண்டாயிரத்துக்கு (2000) கிட்டிய ஊழியர் குழாமிற்கான உணவை வழங்க வேண்டியதுடன் இவ் உணவகம் நவீன அங்கங்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்டுள்ளது.

02. உணவகத்திற்காக வாடகையொன்று அறவிடப்படமாட்டாது. உணவக உபகரணங்கள் இத்திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படுவதுடன் செலவழிக்கப்படும் மின், நீர், காலம், தொகை சார்பாக சிட்டைகளின் 5% தொகை மட்டும் உணவக உரிமையாளரிடம் அறவிடப்படும். இவ்வசதிகளை கவனத்திற் கொண்டு சலுகை விலைகளின் கீழ் உணவு பானங்களை வழங்க வேண்டும்.

03. 2024.01.17 முதல் 2024.02.07 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15ம் மாடியில் பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவில் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை 15ம் மாடியில் பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவில் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை கட்டணம் இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விதாரரின் கடிதத் தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும், எழுத்துமூல வேண்டுதலின் கீழ் 2024.01.17 முதல் 2024.02.07 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஆணையாளர் (பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவம்) இடம் கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி மாதிரிப் பத்திரங்கள் உட்பட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 2,000/= கேள்விக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்குக் கிளையின் பிரதம காசாளருக்குச் செலுத்தி பற்றுச்சீட்டை, பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வியுடன் ரூ. 10,000/= பெறுமதியான இலங்கையில் செயற்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வேண்டுதலின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கேள்விப் பிணை அல்லது அதன் பெறுமதிக்கு மீளளிக்கப்படும் கேள்விவைப்பு தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.

07. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.02.08 மு.ப. 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு ஆணையாளர் (பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவம்) உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கேள்விதாரரால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால் கையோடு கொண்டுவந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15ம் மாடியின் பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவில் உள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது மேல் மூலையில் "உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உணவக சேவைப் பெறுகை - 2024" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

08. கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 15ம் மாடியில் ஆணையாளர் (பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவம்) அலுவகலகத்தில் 2024.02.08 மு.ப. 11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

09. மேலும் தேவைப்படும் விபரங்களை இத்திணைக்களத்தின் பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவின் தொ.பே. இல. 0112135461, 0112135345 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பாரிய அளவிலான பெறுகைக்குழுவின் தலைவர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**
**2024.01.17**

# கண்டி இந்து இளைஞர் மன்ற கட்டடம் உருவாகுவதில் கடந்து வந்துள்ள தடங்கல்கள் நிறைந்த நீண்ட பயணம்

- இந்து இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவர் பெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய செவ்வி
- இக்கட்டடம் இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றதென்றால், அதற்குக் காரணம் பலரதும் அர்ப்பணிப்பேயாகும்



கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவர் சமூகப்பணியாளர் பெ. பாலசுப்பிரமணியம் ஆவார். கண்டி மாநகர சபையின் சமூகநல அபிவிருத்திக் குழுவின் முன்னாள் உறுப்பினரான இவர் கண்டி இளைஞர்கள் அமைப்புகளின் முன்னாள் தலைவருமாவார். இவர் பல்வேறு சிறப்புப் பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர்.

இந்தியாவிலுள்ள குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் மற்றும் அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியவர்களுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ளவர். அகில இலங்கை சமாதான நீதவானான அவர், தினகரன் வாரமஞ்சரி மற்றும் தினகரன் நாளிதழ் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சமூக சேவைக்கான விசேட விருது பெற்றவர்.

இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகின்றது.



**கேள்வி: கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் ஆரம்ப காலத்தில் கட்டட நிர்மாணப் பணிகளுக்கான எண்ணக்கரு எப்படி தோற்றம் பெற்றது? அது பற்றிய விடயங்களைக் கூற முடியுமா?**

பதில்: கண்டியில் இந்து இளைஞர் மன்றத்தை ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து எமது சங்கத்தின் மாதாந்த செயற்குழுக் கூட்டத்தை கண்டியிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக நடத்தி வந்தோம். அவர்கள் அப்பொழுது எங்களிடத்தில் இருந்து எந்தவிதமான கட்டண அறவீடுகளும் பெற மாட்டார்கள். இலவசமாகத் தந்துதவினார்கள். அங்கு நடைபெறும் கூட்டத்தின் பிரகாரம் இந்து சமய விழிப்புணர்வு செயற்திட்டங்களை கண்டியில் முன்னெடுத்து வந்தோம்.

1999களில் வை. எம். சி. ஏ. மண்டபத்திற்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டு வந்தார். அதன் பிறகு அங்கு எமது சங்கத்தின் கூட்டங்கள் நடத்த அனுமதியளிக்கப்படவில்லை. அதன் பிறகு வீதியில் இருந்து கதைத்து விட்டு கலைந்து சென்றோம். எங்கு வைப்பது என்ற யோசனை எழுந்தது. அதன் பின்னர் எனது கடையில் நடத்தி வந்தோம். அப்பொழுது எனது கடையில் கூட்டம் நடத்தினோம். அங்கு வந்தவர்களுக்கு அமர்வதற்கு நாற்காலிகள் கூட இருக்கவில்லை. எனது கடை ஹாட் வெயார் கடையாகும். அங்குள்ள மின்இணைப்பு வயர் ரோலினை தட்டுத்தட்டாக அடுக்கி அதிலே வந்தவர்களை அமரச் செய்து கூ ட்டம் நடத்தி வந்தோம். அப்பொழுது கண்டி - திருகோணமலை வீதியில் புதிய கடையொன்றைப் பெற்றேன். அக்கடையில் மேல் இடத்தை கூட்டம் நடத்துவதற்கும் அலுவலகமாகச் செயற்படுவதற்கும் இலவசமாக இந்து இளைஞர் சங்கத்திற்கு வழங்கினேன். புதிய நிரந்தர இடம் ஒன்று கிடைக்கும் வரை எனது இடத்தை அலுவலகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஒப்படைத்தேன். அன்றில் இருந்து சகல அலுவலக நடவடிக்கைகளும் கூட்டமும் எனது கடையின் மேல் தட்டில்தான் நடைபெற்றன. எனது இடம் சுமார் 7 வருடங்கள் பயன்படுத்தப் பட்டது.

**கேள்வி: நீங்கள் இந்து இளைஞர் மன்றத்திற்கு நிரந்தரக் கட்டடத்தைப் பெற்றுக் கொள்ள முன்னெடுத்த நடவடிக்கைகள் பற்றிக் கூறுவீர்களா?**

பதில்: அங்கு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்



தின் தீர்மானத்திற்கு இணங்க கண்டி மாநரக சபையிடம் கண்டியில் மன்றத்திற்கு நிரந்தரக் கட்டடத்தை அமைத்துக் கொள்வதற்காக கோரிக்கைகளை முன்வைத்தோம். அதற்காக பல தடவை அவர்களுடனான சந்திப்புகளையும் மேற்கொண்டோம். அவை மட்டுமன்றி, கண்டிக்கு வருகின்ற நாட்டின் அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து நிரந்தரக் கட்டடத்தை அமைத்துக் கொள்ள அரசாங்கத்திடம் கண்டியில் ஒரு இடத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தோம். அவர்கள் அப்பொழுது ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி சமாளித்து விட்டுச் சென்று விடுவார்கள்.

இருப்பினும் நாங்கள் முயற்சியைக் கைவிடாமல் கண்டி மாநகரசபையிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்துக் கொண்டே இருந்தோம். அப்பொழுது அவர்கள் இந்தக் கோரிக்கையினை கவனத்தில் எடுத்து கண்டியிலுள்ள வை. எம். எம். ஏ. அமைந்துள்ள பின் பகுதியில் ஒரு காணித்துண்டை தருவதாக உறுதியளித்தார்கள் அது கண்டி மாநகர சபைக்கு உரித்தான காணி. அந்த இடத்திற்குச் செல்வதற்கு வீதியில்லை. வை. எம். எம். ஏ. வீதியினைத் தந்தால் போக முடியும். அவர்களிடம் சென்று போய்க் கேட்டோம். அப்பொழுது அதன் தலைவராக டொக்டர் இஸ்மாயீல் இருந்தார். அவர் மிகவும் நல்ல மனிதர். அப்படிப்பட்ட சமூகத் தலைவர்களை இன்று கண்டு கொள்வது மிகவும் அரிது. அவர் உடனே நான்கு அடி வழியைத் தருவதாக உறுதியளித்தார். அப்பொழுது எல்லாம் சரி என்று காணியைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானம் மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேறப்பட்டு எங்களிடம் ஒப்படைப்பதற்கு ஆயத்தமாக இருந்தது.

அப்பொழுது நாட்டில் யுத்தம் நிலவிய காலகட்டம். இந்தச் செய்தியை அறிந்த பௌத்த சங்கம் ஒன்று எதிர்த்தது. "எப்படி அதைக் கொடுப்பது? அவர்களுக்கு காணியைக் கொடுக்க வேண்டாம்" என்று அப்பொழுது இருந்த மாநகர முதல்வரிடம் முறைப்பாடு தெரிவித்து இடையூறு விளைவித்தார்கள். அது அப்படியே மறைந்து போய் விட்டது.

அதற்குப் பின்னர் கண்டியிலுள்ள அனைத்து சமூக இளைஞர் சங்கங்களைக் கொண்ட அமைப்பின் பிரதிநிதிகள் இக்காணி விவகாரம் தொடர்பில் பல முயற்சிகள் எடுத்தார்கள். அப்பொழுது அதன் பொதுத் தலைவராக டொக்டர் இஸ்மாயீல் இருந்தார். இந்த ஒன்றிணைந்த அனைத்து ஆறு இளைஞர் சங்கத்தின் மாதாந்த செயற்குழுக் கூட்டத்தில் ஒவ்வொரு தடவையும் இந்து இளைஞர் மன்றத்திற்கான இடப்பிரச்சினை தொடர்பில் பேசப்படும். எல்லோரும் சேர்ந்து தீர்மானத்தை எடுத்து மீண்டும் மாநகர சபை முதல்வரிடம் கோரிக்கையினை முன்வைத்தோம். ஆனால் ஒன்றும் சரிவரவில்லை. எல்லாம் தோல்வி.

அப்பொழுதுதான் எனக்கு ஒரு சிந்தனை தோன்றியது. இந்து இளைஞர் சங்கத்திற்கு அரச காணி







ஒன்றைப் பெற்றுக் கொள்வது என்பது இயலாத காரியம் ஆகும். எனவே எமது சங்கத்திற்கு கட்டாயம் எப்படியாவது சிறிய காணித் துண்டாவது வாங்கியே ஆக வேண்டும் என்ற வைராக்கியம் எனக்கு ஏற்பட்டது. அது போன்று இந்து இளைஞர் மன்றத்திலுள்ள எல்லோருக்கும் ஏற்பட்டது.

அப்பொழுதுதான் கண்டி - பேராதனை வீதியில் மத்திய மாகாண இந்து கலாசார மண்டபத்திற்கு முன்னால் இடத்தை வாங்க முயற்சி செய்தோம். அப்பொழுது சங்கத்திடம் பணம் இல்லை. அவ்விடத்திற்கு 45 இலட்சம் ரூபா பணம் கொடுக்க வேண்டும். அதற்கான முழுப்பணத்தையும் நானே கொடுத்தேன். அது ஒன்பது பேர்ச் காணி. நீளமானது. 45 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து உறுதியைப் பெற்றுக் கொண்டோம். அந்தப் பணத்தை சேகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம்.

அத்தருணத்தில் திடீரென்று அவ்விடத்தில் காடையர் ஒருவர் வந்து அது தன்னுடைய காணி என்று கூறி, ஏழு எட்டுக் காடையர்களை அழைத்து வந்து வாங்கிய இடத்தின் வீட்டின் முன்னால் கொட்டில் ஒன்றை அடித்து அங்கு இருந்து செல்ல மாட்டோம் என்று அமர்ந்து விட்டார்கள். அவர்கள் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் இருந்தார்கள். பொலிஸுக்குச் சென்று முறைபாடு தெரிவித்தோம். அப்பொழுது பொலிஸார் 'இதை எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் வேண்டும் என்றால் விசாரணை செய்யலாம். தற்போதைய சூழலில் அவர்கள்தான் உள்ளே இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தை வெளியே அனுப்புவதாக இருந்தால் அதற்கு வழக்குத்தான் போட வேண்டும். எங்களால் ஒன்றுமே செய்ய முடியாது' என்று தெரிவித்து கையை விட்டார்கள்.

அப்பொழுது கண்டியில் மிகப் பிரபல்யமான சட்டத்தரணி ரத்வத்த அவர்களைப் பிடித்தோம். அவர் நீதிமன்ற அனுமதியைப் பெற்றார். அவ்விடத்தை அத்துமீறிப் பிடித்துள்ள காடையர்கள் உடன் வெளியேறாவிட்டால் தினமும் ஒரு இலட்சம் ரூபா பணம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கடுமையான நீதிமன்ற உத்தரவை அந்த சட்டத்தரணி பெற்றிருந்தார். அந்த உத்தரவுப் பத்திரத்தை அங்கு அமர்ந்திருந்த காடையர்களிடம் கொண்டு வந்து நான் ஒப்படைத்தேன். அந்தக் காடையர்கள் இரண்டு நாட்களில் ஓடி விட்டார்கள். அதற்குப் பின்னர் இந்த இடம் சரிவராது வேறு இடம் பார்ப்போம் என்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பேராதனை வீதியில் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியில் ஓர் இடம் வந்தது. ஏழு பேர்ச் காணி. சங்கத்தினர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நான் பெற்ற காணியை விற்பனை செய்வதற்கு ஏகமானதாக தீர்மானம் எடுத்தோம். அப்பொழுது எங்களது சங்கத்தில் உள்ள ஒருவர் அந்த இடத்தைப் பெற்றுக் கொள்ள முன்வந்து வாங்கிக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பள்ளி வீதியில் உள்ள இடத்தைப் பெற்றுக் கொண்டோம். அதிலும் சில பிரச்சினைகள் எழுந்தன. தங்களுக்கும் அதில் பங்கு உண்டு என்று இடையூறுகளை விளைவித்தார்கள். அவர்களும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்வந்தார்கள். அப்பொழுது நானும் இச்சங்கத்தின் அப்பொழுது செயலாளராக இருந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களும் குறித்த நபரிடம் பல தடவை பேச்சுவார்த்தைகள் நடத்தி கடைசியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கி ஒரு இணக்கப்பாட்டுடன் காணி உறுதிக்கு எந்த விதமான சிக்கலுமில்லாமல் ஆக்கிக் கொண்டோம்.

**கேள்வி: நிரந்தரக் கட்டடத்திற்கான தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கூற முடியுமா?**

பதில்: 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி கட்டட அடிக்கல் நாட்டுவிழா இடம்பெற்றது. இதன் போது மத்திய மாகாண இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்களும், பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கண்டி நகரிலுள்ள தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காணி கொள்வனவுக்கு மன்றப் பிரமுகர்கள் பலரும் மனமுவந்து நன்கொடைகள் வாரி வழங்கினார்கள். அப்பொழுது இருந்த பொருளாளர் இரா. பாஸ்கரன் அவர்களினால் காணி கொள்வனவுக்கான நிதி திரட்டல் ஆரம்பிக்கப்பட்ட போது முன்னாள் தலைவர் அ. தட்சணாமூர்த்தி நிதியினை வழங்கி ஆரம்பித்து வைத்தார். பலரும் நன்கொடை வழங்கினார்கள். புதிய கட்டடத் திறப்புவிழா எனது தலைமையில் மிகப் பிரமாண்டமான முறையில் 09.02.2009 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகெடுவ கலந்து கொண்டு திறந்து வைத்தார். கண்டி இந்து இளைஞர் மன்ற சிறப்பு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இப்பெரு முயற்சிக்கு செயலாளர் வீ. சிவகுமார். பொருளாளர் இரா. பாஸ்கர் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். அதே போன்று உபதலைவர்களான அ. தட்சணாமூர்த்தி, சி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பெ. இராமநாதன் ஆகியோருடைய பங்களிப்பும் மறக்க முடியாதது.

இக்கட்டடம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது என்றால் அன்றும் இன்றும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்து இந்து சங்க மன்றத்தின் காப்பாளர், உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின் விடா முயற்சியே காரணம். கட்டட நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்து தகுந்த ஆலோசனை வழங்கிய உதவிய மன்றப் பிரமுகர் பெ. ரவீந்திரன் அவர்களின் பணி பாராட்டுக்குரியது. அப்போதைய செயற்குழு உறுப்பினர்கள் பலரும் நிர்மாணப் பணிகளுக்கு வழங்கிய உடலுதவிகளும், பொருளுதவிகளும், ஏராளம். இயன்ற அளவில் பெற்றுக் கொடுத்து அதற்கான புதிய கட்டடத்தை தோற்றுவித்த அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகள் உரித்தாகும்.

மன்றக் கட்டடத்திற்கான நிரந்தர நிறைவேற்றுக் குழுவொன்று அப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது. அதில் மன்றத்தின் முன்னாள் தலைவரும் காப்பாளருமான தேசகீர்த்தி வீ. பாலசுப்பிரமணியம், முன்னாள் தலைவர் பெ. இராமநாதன், முன்னாள் தலைவர் அ. தட்சணாமூர்த்தி, ந. லோகநாதன், தலைவர் பெ. பாலசுப்பிரமணியம், முன்னாள் உபதலைவர் சி. கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் பொருளாளர் பெ. கந்தசாமி, முன்னாள் செயலாளர் சி. பெரியசாமி, இரா. பாஸ்கரன், செயலாளர் வீ. சிவகுமார் ஆகியோர் இங்கு நினைவுகூரப்பட வேண்டியவர்களாவர்.

**கேள்வி: உங்களுடைய செயற்பாடுகள் குறித்து விபரிக்க முடியுமா?**

பதில்: 2 ஆம் உலக இந்து மகாநாட்டை இந்து சமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து வெகுசிறப்பாக நடத்தினோம். அடிக்கடி கொழும்பிலுள்ள இந்து கலாசார திணைக்களத்துடன் நெருக்கான தொடர்பினைப் பேணி பல நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். மன்றத்தின் சின்னம் விளக்கை மாத்திரம் கொண்டிருந்தது. அதற்கென தனித்துவமான கொடியினையும், மன்ற கீதத்தையும் அறிமுகப்படுத்தி மன்றத்திற்கு மேலும் வலிமையூட்டக் கூடிய பணிகளில் ஈடுபட்டுள்ளேன்.

சமய விசேட நிகழ்வுகளை கண்டியிலுள்ள செங்கடலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நேரடி ஒலிபரப்பு செய்வோம். அப்பொழுது வானொலியில் மயில்வாகனம் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நவராத்திரி விழா, சிவராத்திரி விழாக்களை மிகப்பிரமாண்டமான முறையில் நடத்துவோம். இந்து மத சிறப்புச் சொற்பொழிவுக்காக கொழும்பிலுள்ள மிகப் பிரபல்யமான பேச்சாளர் அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களை அழைத்து வந்து நிகழ்வுகளை நடத்துவோம். அவரை வீடு தேடிச் சென்று சந்தித்து அழைத்து வருவேன். அவர் நல்ல விடயங்களை வழிகாட்டுதல்களையும் வழங்குவார். அவர்கள் குடும்ப உறவினர் போன்று எங்கள் குடும்பத்தோடு நேசமாகப் பழகினார்கள். எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் அவர்களை அழைப்போம். அவர்கள் வந்து கலந்து கொள்வார்கள். மிக அருமையான அம்மையார். எங்கள் வீட்டில்தான் தங்குவார். அவருடன் பழக்கக் கிடைத்தமை என்பது பெரியதொரு பாக்கியம். எங்களுடைய சங்கத்தின் வளர்ச்சிக்கு அந்த அம்மையாரின் வழிகாட்டலும் ஆலோசனையும் இருந்தன.

தற்போது 50 ஆண்டு நிறைவை பூர்த்தி செய்திருக்கும் தருணத்தில் நடப்பு வருடத் தலைவராக பி. வைதீஸ்வரன் அவர்களும், செயலாளராக பெ. ஜெயபிரகாஷ் அவர்களும், பொருளாளராக எஸ். பரமேஸ்வரன் அவர்களும் செயற்பட்டு வருகின்றார்கள்.

உபதலைவர்களாக எம். சுந்தரமூர்த்தி, தர்சன் ஆகிய இருவரும் உள்ளனர். உபசெயலாளராக வி. சுரேஷ்குமார், என். துஷ்யந்தன் ஆகிய இருவரும் உள்ளனர். உபபொருளாளர்களாக கே. ராஜயோகேஸ்வரன், எஸ். சசிகுமார் ஆகிய இருவரும் உள்ளனர். செயற்குழு உறுப்பினர்களாக எஸ். வேல்ராஜ், பி. விநாயகமூர்த்தி, எஸ். ராஜேந்திரன், கே. பாஸ்கரன், பி. மனோகரன், ஆர். சுதர்ஷன் ஆகியோர் இணைந்து பங்காற்றி வருகின்றனர்.



ஜீவராஜ்



## இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்திற்கும், தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய

# ஞானியர் திலகம் ஸெய்யது கலீல் அவ்ன் மௌலானா (ரஹ்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34 வது தலைமுறைப்பேரர் குத்புஸ் ஸமான் ஷம்ஸுல் உஜூத் ஜமாலிய்யா அஸ்ஸெய்யது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் தனது 87 ஆவது வயதில் கடந்த 03 ஆம் திகதி இலங்கையில் காலமானார். அன்னாரது ஜனாஸாவுக்கு இலங்கையின் ஆஷிக்கீன்கள், முரீதீன்கள் உட்பட பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து அன்னாரது இறுதி விருப்பப்படி ஜனாஸா தமிழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருச்சி மத்ரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அரபுக் கல்லூரி வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸாவில் இந்தியன் யூனியன் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன், கலாநிதி அப்சல் உலாமா பேராசிரியர் ஷைக் அப்துல்லா ஜமாலி, கலாநிதி அறிவியல் அறிஞர் கலீபா முகம்மது இக்பால், தியாகி அப்பாஸ் ஷாஜஹான், கலாநிதி கலீபா சஹாப்தீன், அவ்னியா உலக அமைதி அறக் கட்டளை பொதுச் செயலாளர் எஸ்.ஐ. தவ்லத், பொருளாளர் ஹைதர் நிசாம், மத்ரஸா ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை தலைவர் கலீஃபா ஹுஸைன் முகம்மது, மருத்துவர் கலீஃபா அஷ்ரப் அலி, வழக்கறிஞர் கலீபா லியாகத் அலி, கலீபா சிராஜுதீன், கலீபா முஸ்தபா, வழக்கறிஞர் ரவூப், முகம்மது இராவுத்தர், விஞ்ஞானி சக்கரை முகம்மது, வெள்ளம்ஜி அப்துல் ரவூப், தேரிழை இம்தியாஸ், பீர் மைதீன், கவிஞர் இஸ்மத், கத்தார் யூசுபு, அஹமது இம்தாதுல்லாஹ், பக்ருதீன், முகம்மது அலி, அதிரை ஷர்புத்தீன் டவுன் காஜிமார்கள், ஊடகவியலாளர் ஷாஹுல் ஹமீது, ஏ.மெ.சபை செயலாளர் யாஸீன் ஏகத்துவ மெஞ்ஞான சபை தலைவர்கள், செயலாளர்கள், முரீதின்கள், முஹிப்பீன்கள், ஆலிம்கள், ஆஷிக்கீன்கள், பொதுமக்கள் எனத் தமிழகத்தின் பல பிரதேசங்களையும் சேர்ந்தோர் கலந்து கொண்டனர். ஜனாஸா தொழுகையில் பல்லாயிரக்கணக்கோர் கலந்து கொள்ள, மறைந்த ஞான மேதை கலீல் அவ்ன் நாயகத்தினால் அடையாளம் காட்டப்பட்ட அவர்களது பேரர் சையது ஜமாலியா யாஸீன் அலி மௌலானா அல் ஹஸனி ஹுஸைனி ஹாஷிமி ஜனாஸா தொழுகையும், பிரார்த்தனையும் நிகழ்த்தினார்.

இவரது மறைவையொட்டி தமிழ்நாடு மாநில அரசின் மாநில சிறுபான்மைகள் கமிஷனின் தலைவர் எஸ் பீட்டர் அல் போன்சே விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், 'சமய நல்லிணக்கத்தையும் மனித நேயத்தினையும் மெய்ஞானத் தத்துவ ஞானங்களையும் உலகெங்கிலும் சிறப்பு தமிழ் மொழியிலும் அரபு மொழியிலும் பரப்பி வந்த ஞான மகானின் மறைவை அறிந்து மிகவும் வருந்துகிறேன். தமிழுக்கும் ஞான மார்க்கத்திற்கும் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் அவர் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது' என்றுள்ளார்.



தமிழ்நாடு மாநிலத்தின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், 'நபி (ஸல்) அவர்கள் விரும்பிய எளிய வாழ்க்கையை அவ்ன் மௌலானாவும் வாழ்ந்தார். இன, மத பேதமின்றி அனைத்து மக்களிடமும் மெஞ்ஞானத்தையும் அமைதியையும் மத நல்லிணக்க மனித நேய வாழ்க்கை நெறியையும் போதித்த அவர் அதில் வெற்றியும் கண்டார். ஆசிரியப் பணியிலும் அதன் பின்னர் இறைஞானத்தைப் பறைசாற்றுவதிலும் முத்திரை பதித்தவர் அவர். தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் சு. திருநாவுக்கரசரும் மற்றும் ஏராளமான முக்கிய பிரமுகர்கள், ஆலிம்கள், கல்லூரி போராசிரியர்கள் இவரது மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை அவர் குடும்பத்தினர் சையது யாஸீன் அலி மௌலானா, சையது சாஜித் அலி மௌலானா, சைய்யது வாரிசு அலி மௌலானா, சையது ஜாஹிது அலி மௌலானா ஆகியோருக்கு தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை இலங்கையின் முன்னணி கவிஞரான காப்பியகோ ஜின்னாஹ் ஷெரிப்தீன் விடுத்துள்ள செய்தியில், ஆத்மீகக் குருவாகவும் அண்ணல் நபியின் எளிமை வாழ்வைத் தனது இறுதிக்காலம் வரை வாழ்ந்து காட்டிய இறைநேசர். அரபு மட்டுமல்லாது தமிழில் சங்க இலக்கியங்களையும் துறைபோகக் கற்றவர். உன்னதமான மரபுசார் கவிஞர் யாரும் தொட அஞ்சும் சித்திரக் கவிதை படைப்பதிலும் வல்லவர்.

எனது தந்தையார் புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீனுடன் ஒருசேரக் கவிமேடைகளிலும் களங்கண்ட தமிழ்ப் பேரறிஞர். முதன்முதலில் டுபாய் நாட்டில் அறிவியலறிஞர் வழுத்தூர் வெள்ளம்ஜி முஹம்மது இக்பாலின் இல்லத்தில் சந்தித்து எனது 'திருநபி காவியத்தின் பிரதியைத் தந்தபோது அன்னார் அதிலிருந்த வெண்பாக்களை வரிவரியாய் படித்துவிட்டு' தளைதட்டாமல் பாடியுள்ளீர்கள்' என அன்பொழுக ஆசீர்வதித்தார். அந்த இலக்கண வித்தகர்.

எனது தலைமையில் நடைபெற்ற இரண்டாவது இலங்கை இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டுப் பேராளர்களுக்கு வழங்கவென அவரது தமிழிலக்கியப் படைப்புக்களைத் தந்துதவினார்.

தோற்றத்தில் எந்தவித படாடோபமும், உடையலங்காரமுமின்றி ஒரு சாதாரண மனிதனைப் போன்றே இறுதிவரை வாழ்ந்தார். என்றும் புன்னகை மாறாத வதனத்தோடு தன்னை நேசிப்பவர்களை நேசித்த உத்தமத் தலைவர்.

என்மீதும் என் எழுத்தின் மீதும் எனது தமிழின் மீதும் பற்று கொண்டு ஊக்குவிப்பவர். ஒருமுறை அவரை அவர்களது இல்ல நிகழ்வில் பங்குகொண்டபோது எந்தவித பாகுபாடுமின்றி என்னைக் கொண்டே ஒரு வெளியீட்டு நிகழ்வை நடாத்தித் கண்ணியஞ் செய்த ஒரு நிகழ்வு மாற்றாரையும் மதிக்கும் அவரது உயர் பண்புக்கு உதாரணமாகும்' என்றுள்ளார்.

உமறுப்புலவர், சதாவின் செய்குத்தம்பி பாவலரைப்போன்று மாபெரும் புலவர் எனப்போற்றுகிறார் தமிழ்நாடு மாநில ஜமாத்துல் உலமா தலைவர்களில் ஒருவரான பி.எம். ஜியாவுதீன் பாகவி அவர்கள். மௌலானா, நான் சந்தித்த ஞானிகளுள் மிக உயர்ந்தவர் என்கிறார் தமிழறிஞர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்.

இவ்வாறு பல தரப்பினரதும் அன்பையும் அபிமானத்தையும் பெற்ற வாப்பா நாயகம் என அன்பாக அழைக்கப்படும் அவன் மௌலானா, ஜமாலிய்யா அஸ் ஸையித் யாஸீன் மௌலானா (ரஹ்) வின் மூன்றாம் மகனாக 1937 டிசம்பர் 20 ஆம் திகதி இலங்கையின் வெலிகமவில் பிறந்தார்.

இஸ்லாமிய உலகில் திருக்குர்ஆனுக்கு அடுத்த இடத்தில் போற்றப்படும் புஹாரி ஷரீப் எனும் நபிமொழி நூலுக்கு நான்கு பாகங்களில் விரிவுரை எழுதியவரும் அரபுத் தமிழ் அகராதி, மற்றும் அரபு ஆத்ம ஞான நூற்கள் பலவற்றிற்கு விரிவுரை எழுதியவருமான தங்கள் தந்தையாரிடமே அரபு மற்றும் ஆத்ம ஞான ஸூஃபி ஞானத்தை கற்றார். 1963 இல் வெலிகம அறபா மத்தியக் கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 1963 முதல் 1990 வரை சிலாபம், புத்தளம், அனுராதபுரம் ஆகிய ஊர்களில் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார். அதன் பின்னர் தங்கள் தந்தையார் தோற்றுவித்த அத்தரீக்கத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா எனும் ஞானப்பாட்டையைத் தொடர்ந்து நடத்திட தங்களின் அரசுப் பொறுப்புகளிலிருந்து ஓய்வு பெற்று இந்தியா, இலங்கை, அரபு நாடுகள், குவைத், சிங்கப்பூர், மலேசியா, லண்டன் மற்றும் பல நாடுகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான சீடர்களுக்கு ஞானவழிகாட்டும் குருவாக விளங்கினார்.

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை என்ற பெயரில் அமைப்பை 1970 ஆரம்பத்தில் நிறுவி சாதி, மத, பேதமின்றி ஆத்மஞானம் படிக்க விரும்பும் அனைவருக்கும் ஞானக்கல்வி அளித்தார். 'மறைஞான பேழை' என்ற மாத இதழ் மௌலானாவினால் 1984 முதல் சிறப்பாக வெளியிடப் படலானது.

அதேநேரம் திருச்சி மத்ரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் என்ற பெயரில் ஓர் அரபுக் கல்லூரியை 1980 களில் நிறுவி அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை மூலம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கட்டணமின்றி இஸ்லாமிய மார்க்க கல்வியோடு உலக கல்வியும் கற்கவென கடந்த 35 ஆண்டுகளாக இஸ்லாமிய சேவை செய்தார்.

அது சிறப்பாக தொடர்ந்து வருகிறது. அத்தோடு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென திருச்சியில் அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் என்ற பெயரில் கல்லூரியொன்றையும் ஆரம்பித்து வைத்துள்ளார்கள்.

பொருளாதார கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு உதவி செய்வதிலும் அவர் அதிக அக்கரை எடுத்து செயற்பட்டுள்ளார்கள். குடிநீர் வசதி இல்லாதவர்களுக்கும் மின்வசதி இல்லாதவர்களுக்கும் அவற்றை பெற்றுக்கொடுத்தல், அவற்றுக்கான கட்டணங்களை செலுத்த முடியாத நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு நிதியுதவி அளித்தல், ரமழான் நோன்பு காலங்களில் ஏழைகளுக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருட்களை வழங்குதல் அவற்றில் குறிப்பிட்டத்தக்க சேவைகளாகும்.

மேலும் அரபு மொழியிலும் தமிழ் மொழியிலும் அளவிலாத் திறன் பெற்று விளங்கிய இவர், இருமொழிகளிலும் கவிதை யாத்து நூற்கள் எழுதியுள்ளார்.

### ஏகாந்தம்

நீயென்றும் நானென்றும் நிலை கொண்ட தொன்று
மாயத்துள் மறைந்தாலு மதி கொண்ட தொன்று

பன்னாமம் பூண்டாலும் பரமாவ தொன்று
தன்னாமம் துறந்தாலும் பரமாவ தொன்று

பேதங்கள் பலவாகப் பெயர்ந்தாலு மொன்று
பூதங்கள் பலபேர் பொ திந்தாலு மொன்று

பூதங்களாமென்ற பேதங்கள் பெற்றாய்
நாதத்தினமைவான நாமங்கள் பெற்றாய்

வேதத்தின் பிரிவாலே வேறாதல் கண்டாய்
வாதத்தில் மூழ்கிப் பின் வாட்டங்கள் கொண்டாய்

வேதங்க ளொன்றான வேதாந்தம் நீயே
பேதங்கள் நிலையாத மேதாந்தம் நீயே

மறையென்னும் திரையாலே மறைதத்வ மீந்தாய்
மறைதத்வ மறியாரை மறைத்தே நிறைத்தாய்

இறந்தாரும் இருப்பாரும் இறை உன்னிலானார்
நீயற்ற இடமின்றி நீயே நிறைந்தாய்

நிறைந்தாயே நிறைந்தாயே நீயே நிறைந்தாய்
இறையென்னுந்திருநாமம் கொண்டே நிறைந்தாய்

– ஸெய்யது கலீல் அவ்ன் மௌலானா

குறிப்பாக, தமிழில் 30க்கும் மேற்பட்ட கவிதை, உரைநடை, மொழிபெயர்ப்பு நூற்கள் எழுதியுள்ளார். உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம் போன்ற சிறப்பான காவியம் ஒன்றும், நாயகர் பன்னிருபாடல் என்ற புதிய பிரபந்த நூலும், மகானந்தாலங்கார மாலை என்ற சித்திரக்கவிதை நூலும் எழுதியுள்ளார்.

இவ்வாறு தம் வாழ்நாளில் தாம் சார்ந்த சமூகத்திற்கும் உலக மக்களுக்கும் தம்மாலான அளப்பரிய சேவைகள் செய்துள்ள குத்புஸ் ஸமான் ஷம்ஸுல் உஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் அவ்ன் மௌலானாவின் ஞான வழிகாட்டல், சமூக சேவைகள் என்பன இஸ்லாமிய அடிப்படையில் அவர்களது பேரர் சையது யாஸீன் அலி மௌலானா வழியாக தொடரும். ஆன்மிக சீடர்கள், ஆஷிகின்கள் மற்றும் மக்கள் மனதில் எப்போதும் கலீல் அவ்ன் மௌலானா (ரஹ்) வாழ்வார்கள்.

**கலாநிதி இப்னு ஜமால்...**
சென்னை, தமிழகம்

# ஊடகவியலாளர்களுக்கு அஸிதிஸி புலமைப் பரிசில் வழங்கும் வைபவம்







ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மற்றும் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோரின் தலைமையில் 'அஸிதிஸி' புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நேற்று ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இவ்வைபவத்தில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார 39 ஊடகவியலாளர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி வைத்தார். லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடகவியாலாளர் பபுது சபுதந்திரி, சிரேஷ்ட புகைப்படப் பிடிப்பாளர் சுதத் நிஷாந்த ஆகியோர் இராஜாங்க அமைச்சரிடமிருந்து புலமைப் பரிசிலுக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொண்டனர். புலமைப் பரிசில் பெற்றவர்கள் இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

படம் நிஸ்ஸங்க விஜேரத்ன

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின்
## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

**யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்**

| | | |
|---|---|---|
| திகதி | : | 17.01.2024 |
| கடன் இலக்கம் மற்றும் தலைப்பு | : | 3603 - SRI<br>யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் |
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

**2023ஆம் ஆண்டில் நான்காவது ஏலவிற்பனைக்கு சமர்ப்பிக்கப்படவிருந்த ஆனாலும் வாடிக்கையாளர்களுக்கு தமது அடகுவைக்கப்பட்ட தங்க ஆபரணங்களை மீட்டுக கொள்ள மேலதிகக் காலத்தினை வழங்கும் பொருட்டு தக்கவைக்கப்பட்ட தங்க ஆபரணங்களுள் மீட்கப்படாத தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்.**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், காரியாலயங்கள் மற்றும் அடகு மத்திய நிலையங்களில் அடகு வைக்கப்பட்ட 2024.02.06ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கமைய 2024.02.07ஆம் திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் மாகாணக் காரியாலயங்களில், மாவட்டக் காரியாலயங்களில் மற்றும் கிளைகளில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அனைத்து ஏலவிற்பனைகளும் மு.ப 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| அடகு பெற்றுக் கொள்ளப்பட்ட இறுதித் திகதி | அடகுக் காலவெல்லை | அடிப்படையாய் அமைந்த திகதி | கடந்துள்ள காலம் |
|---|---|---|---|
| 2022.08.31 | 12 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | 01 வருடம் கடந்த |
| 2023.02.28 | 06 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | 06 மாதங்கள் கடந்த |
| 2023.05.31 | 03 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்ட | 2023.10.31 | 03 மாதங்கள் கடந்த |

**மாகாணக் காரியாலயங்கள்**

| மத்திய மாகாணம் | வடமத்திய மாகாணம் | வடமேல் மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் | ஊவா மாகாணம் | மேல் மாகாணம் | கிழக்கு மாகாணம் | தென் மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| தொ.பே.இல. 0812214115/6/7 | தொ.பே.இல. 0252223080/ 0252225214 | தொ.பே.இல. 0372231880 | தொ.பே.இல. 0452224566 | தொ.பே.இல. 0552223635 | தொ.பே.இல 0332248731/ 0332248583 | தொ.பே.இல 0652225881 | தொ.பே.இல 0412226208/9 |

**மாவட்டக் காரியாலயங்கள்**

| கண்டி | பொலன்னறுவை | குருநாகல் | இரத்தினபுரி | மொனராகலை | கம்பஹா கொழும்பு | அம்பாறை | அம்பாந்தோட்டை |
|---|---|---|---|---|---|---|---|
| தொ.பே.இல 0812214124/ 0812214115/6/7 | தொ.பே.இல 0272223212 | தொ.பே.இல 0372268323 | தொ.பே.இல 0452230512 | தொ.பே.இல 0552273930 | தொ.பே.இல 0332234922 | தொ.பே.இல 0632223420 | தொ.பே.இல 0472240647/8 |
| **மாத்தளை** | **அனுராதபுரம்** | **புத்தளம்** | **கேகாலை** | **பதுளை** | **களுத்துறை** | **மட்டக்களப்பு** | **மாத்தறை** |
| தொ.பே.இல 0552051332/ 3 | தொ.பே.இல 0252223080 | தொ.பே.இல 0322223448 | தொ.பே.இல 0352230333 | தொ.பே.இல 0552224192 | தொ.பே.இல 0342264276 / 0342262526 | தொ.பே.இல 0652225845 | தொ.பே.இல 0412231585 |
| **நுவரெலியா** | **வடக்கு மாவட்டம்** | | | | | | **காலி** |
| தொ.பே.இல 0522224552/ 0522222630 | தொ.பே.இல 0212280180 | | | | | | தொ.பே.இல 0912222458 |

**மத்திய மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| கம்பளை, உடவெல, ஹதரலியத்த, மாரஸ்ஸன, தன்துரே, வத்தேகமை, மொரயாய, தெல்தெனியா, பூஜாபிட்டிய, கட்டுகஸ்தோட்டை, உடுதும்புரை, மெனிக்ஹின்ன, தவுலகல, நாவலப்பிட்டி, ஹேதெனிய, கண்டி, பேராதனை, கண்டி இரண்டாம் நகர், செங்கடகல | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, நாவலப்பிட்டி கிளை, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி. |
| நுவரெலியா, ரிக்கிலகஸ்கட, கினிகத்தேனை, பூண்டுலோயா, நில்தண்டாஹின்ன, அக்கரப்பத்தனை, ஹங்குராங்கெத்த, கொட்டகலை | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, நுவரெலியா கிளை, நிவ் பேல் பசார் வீதி, நுவரெலியா. |
| மாத்தளை, தம்புளை, கலேவெல, லக்கலை, இரத்தோட்டை, வில்கமுவை, நாவுல | 2024.02.09 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மாத்தளை மாவட்டக் காரியாலயம், இல. 05, பலாபத்வல, மாத்தளை. |

**வட மத்திய மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| மிஹிந்தலை, அனுராதபுரம், தம்புத்தேகமை, கஹடகஸ்திகிலிய, கல்நேவ, தலாவ, மதவாச்சி, திரப்பனை, ரம்பேவ, கலென்பிந்துனுவெவ, கோணபத்திராவ, அனுராதபுரம் புதிய நகர், கெக்கிராவை, தம்புத்தேகமை புதிய நகர், போகஸ்வெவ, வவுனியா, மன்னார், சுன்னாகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கனகராயன்குளம் | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாணக் காரியாலயம், இல. 65D, 4வது குறுக்குவீதி, அபய பிரதேசம், அனுராதபுரம். |
| பொலன்னறுவை, மெதிரிகிரியா, புலஸ்திகமை, ஹிங்குராக்கொட, பகமூன, மன்னம்பிட்டி, கல்அமுன, சிரிபுர, கதுருவெல, அரலகன்வில, செவனபிட்டி | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, பொலன்னறுவை கிளை, மட்டக்களப்பு வீதி, பொலன்னறுவை. |

**வட மேல் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| குளியாபிட்டி, பண்டுவஸ்நுவர, நிகவெரட்டிய, கிரியுல்ல, அலவ்வை, பொத்துஹர, ரிதீகமை, மாவத்தகமை, நாரம்மல, பரகஹதெனிய, அத்துகல்புர, குருநாகல், மெல்சிறிபுர, இப்பாகமுவ, பொல்பித்திகமை, கல்கமுவை, அம்பன்பொல, பெரகும்புர, மஹவ, வாரியபொல | 2024.02.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, குருநாகல் கிளை, சுரதிஸ்ஸ மாவத்தை, குருநாகல். |
| புத்தளம், மாம்பூரி, பாலக்குடா, கல்பிட்டி, பன்னல, போவத்தை, தும்மலசூரிய, முந்தல், மஹவெவ, நாத்தான்டியா, கிரிமெட்டியான, புனித ஆனாபுரம், நவகத்தேகமை, சிலாபம், ஆனைமடு, வென்னப்புவை | 2024.02.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, புத்தளம் மாவட்டக் காரியாலயம், இல. 160 கொழும்பு வீதி, மைக்குளம், சிலாபம். |

**சப்ரகமுவ மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| கேகாலை, பிட்டகல்தெனிய, ரம்புக்களை, மாவனல்லை, வரக்காபொலை, அரநாயக்க, கித்துல்கல, ருவன்வெல்ல, தேவாலேகம, புலத்கொஸஹுபிட்டிய, தெரனியலை, ஹெம்மாதகமை, நெலும்தெனிய, எட்டியாந்தோட்டை, கொட்டியாகும்புர, தெஹியோவிட்ட | 2024.02.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, கேகாலை மாவட்டக் காரியாலயம், இல. 143/2, பிரதான வீதி, கேகாலை. |
| இரத்தினபுரி, பெல்மதுளை, பலாங்கொடை, எம்பிலிபிட்டி, கொலொன்ன, எஹலியகொட, கலவானை, கொடகவெல, எரத்ன, குருவிட்ட, நிவித்திகலை, கஹவத்தை, ரக்வானை, கிரிஎல்ல, பொத்துபிட்டிய, வெலிகேபொல, பலாபத்தல, புளிகுபிட்டிய | 2024.02.10 | பிரதேச அபிவிருத்தி வங்கி, இரத்தினபுரி மாவட்டக் காரியாலயம் இல. 278 குடுகல்வத்த, இரத்தினபுரி. |

**ஊவா மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| பதுளை, பண்டாரவளை, போகஹகும்புர, தியத்தலாவை, கிராந்துருகோட்டை, ஹல்தும்முல்ல, ஹப்புத்தளை, கந்தகெட்டியா, லுணுகலை, மகியங்கனை, மாளிகாதன்னை, மீகஹகிவுல, பசறை, ரிதீமாலியத்த, ஊவா பரணகமை, வெளிமடை | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, பதுளை மாவட்டக் காரியாலயம், இல. 1/315, பசறை வீதி, பதுளை. |
| படல்கும்புர, பிபிலை, புத்தள, மடுல்ல, மெதகம, மொனராகலை, செவனகல, சியம்பலாண்டுவ, தனமல்வில, வெள்ளவாய | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மொனராகலை கிளை, இல. 151, வெல்லவாய வீதி, மொனராகலை. |

**மேல் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| அவிசாவளை, திவுலபிட்டி, கம்பஹா, ஹோமாகமை, ஜாஎல, களனி, கிரிந்திவெல, கொலொன்னாவை, மாவரமண்டிய, மினுவாங்கொடை, மீரிகமை, மிரிஸ்வத்தை, நீர்கொழும்பு, நிட்டம்புவ, பிலியந்தலை, ராகமை, நுகேகொடை | 2024.02.08 | பிரதேச அபிவிருத்தி வங்கி, மேல் மாகாணக் காரியாலயம், மிரிஸ்வத்தை. |
| அகலவத்த, பதுரலிய, பேருவளை, புலத்சிங்கள, தொடங்கொட, கோணபொல, ஹொரனை, இங்கிரியா, களுத்துறை, மத்துகமை, மீகஹதென்ன, மில்லனிய, மொரகஹஹேன, மொரொன்துடுவ, பாணந்துறை, வாத்துவ, வலகெதர, வரகாகொட | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, களுத்துறை மாவட்டக் காரியாலயம், இல. 51, இரத்தினபுரி வீதி, ஹொரனை. |

**கிழக்கு மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| அக்கறைப்பற்று, அம்பாறை, தமன, தெஹியத்தகண்டி, கல்முனை, மஹாஓயா, நிந்தவூர், பொத்துவில், சம்மாந்துறை, உஹனை, மட்டக்களப்பு, மட்டக்களப்பு இரண்டாம் நகர், செங்கலடி, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, கந்தளாய், காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, மூதூர், திருகோணமலை, வாழைச்சேனை | 2024.02.10 மற்றும் 2024.02.11 | பிரதேச அபிவிருத்தி வங்கி, அம்பாறை மாவட்டக் காரியாலயம், இல. 01, 04வது குறுக்கு வீதி, ரீகல் சந்தி, அம்பாறை |

**தென் மாகாணம்**

| கிளைகள் | ஏலவிற்பனை திகதி | ஏலவிற்பனை இடம்பெறும் இடம் |
|---|---|---|
| ஹக்மன, ஊருபொக்க, தெய்யன்தர, அக்குரஸ்ஸை, வெலிகம, கன்தர, கெக்கனதுர, பிட்டபெத்தர, கம்புருகமுவ, தெனியாய, கம்புருபிட்டி, திஹகொட, மாத்தறை நகர், பம்புரனை, மாவரல, மொரவக்க, கிரிந்த, திக்வெல்ல, மிரிஸ்ஸ, தெவிநுவர | 2024 பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி முதல் 11ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, மாத்தறை மாவட்டக் காரியாலயம், இல. 05, அளுத் மாவத்தை, உயன்வத்த, மாத்தறை. |
| அம்பலாந்தோட்டை, அகுனகொலபெலஸ்ஸ, கட்டுவன, பெலியத்த, திஸ்ஸமஹாராமை, லுணுகம்வெஹெர, சூரியவெவ, வீரகெட்டிய, தங்காலை, அம்பாந்தோட்டை, வலஸ்முல்ல, பரவகும்புக்க, ரத்ன, மித்தெனிய, வராபிட்டி | 2024 பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி முதல் 11ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, அம்பாந்தோட்டை மாவட்டக் காரியாலயம், இல. 61/36, தர்மபால மாவத்தை, தங்காலை. |
| எல்பிட்டியா, பட்டபொல, பிட்டிகல, கோணகல்புர, இமதூவ, பத்தேகமை, தல்கஸ்வெல, அக்மீமன, கரன்தெனிய, காலி, ஊரகஸ்மங்ஹன்திய, யக்கலமுல்ல, நெலுவ, உடுகம, அஹன்கம, ஹிக்கடுவை, கராபிட்டி, பலபிட்டி, களுவெல்ல | 2024 பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி முதல் 11ஆம் திகதிக்குள் வார அல்லது வார இறுதி நாளில் | பிரதேச அபிவிருத்தி வங்கி, காலி மாவட்டக் காரியாலயம், இல. 301, மாத்தறை வீதி, மாகால்ல, காலி. |

**குறிப்புகள் ஏலவிற்பனையை பிற்போடுதல் அல்லது ஒன்றிணைத்துச் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குரியதாகும்.**

**லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்குரிய இக்கிளைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.**

**பிரிவுத் தலைவர் கடன் அறவீடு**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**பிரதான காரியாலயம்**
**இலக்கம் 933,**
**வெதமுல்லை, களனி**
**2024.01.17**

| | | |
|---|---|---|
| அம்பாந்தோட்டை இரண்டாம் கிளை | - | அம்பாந்தோட்டை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| கதுருவெல இரண்டாம் கிளை | - | கதுருவெல கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| கேகாலை இரண்டாம் கிளை | - | கேகாலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது |
| திருகோணமலை இரண்டாம் கிளை | - | திருகோணமலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. |


# புத்தளம் நகரத்துக்கு புதிய பிறப்பு ,இறப்பு பதிவாளர்

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் நகரத்துக்கான, புதிய பிறப்பு, இறப்பு நிரந்தர பதிவாளராக புத்தளத்தைச் சேர்ந்த, பேர்னாட் மேரி இந்துமதி நியமனம் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் இரு மொழிகளிலும் சரளமாக பேசக் கூடியவர். சமாதான நீதவான் மற்றும் திருமணப் பதிவாளராகவும் இவர் கடமையாற்றி வருகின்றார். பதிவாளரை திங்கள் முதல் வெள்ளி வரை புத்தளம், தள வைத்திய சாலை அலுவலகத்திலும், சனி, ஞாயிறு தினங்களில், தனது இல்லத்திலுள்ள அலுவலகத்திலும் சந்திக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில்

# றிஸ்லி முஸ்தபாவினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வொலிவேரியன் கிராம மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு *Rizley Musthaffa Education Aid Social Service* நிறுவனத்தின் பூரண அனுசரணையில் அண்மையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பைன் ஸ்டார் (FINE STAR) விளையாட்டுக் கழக, சமூக சேவை அமைப்பின் தலைவர் எம்.எம். றியாஸின் வேண்டுகோளுக்கிணங்க, மாயோன் குரூப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா, கள விஜயம் மேற்கொண்டு, வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாடி அவர்களுக்கான உணவுப் பொதிகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகத்தினர், பைன் ஸ்டார் கழக நிருவாக உறுப்பினர்கள், கழக வீரர்கள், மயோன் குரூப் அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# தேயிலை கொழுந்து விலை அதிகரிப்பு



இரத்தினபுரி சுழற்சி நிருபர்

தற்போது நாட்டில் பச்சை தேயிலை கொழுந்து விலை அதிகரித்து வருவதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கமைய இரத்தினபுரி மாவட்டத்தில் பச்சை தேயிலை கொழுந்துக்கு தேயிலை தொழிற்சாலைகளால் வழங்கப்படும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு கிலோகிராம் பச்சை தேயிலை கொழுந்தின் விலை 220 ரூபாவாக அதிகரிக்கப்ட்டுள்ளதாகவும், தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் வருமானம் அதிகரித்துள்ளதாக தெரிவித்த தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள், தொழிற்சாலைக்கு வழங்கும் தேயிலை கொழுந்தை தரமானதாக வழங்க சிறு தேயிலை தோட்டங்களின் உரிமையாளர்கள் முயற்சிக்க வேண்டுமென்றனர். இந்நிலையில், பச்சை தேயிலை கொழுந்தின் விலையை மேலும் அதிகரிக்க முடியுமெனவும், தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# கல்முனை நீதிபதிக்கு முதுமாணி பட்டம்

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



கல்முனை நீதிமன்ற நீதிபதி ஷெரிப் சம்சுதீன் *LLM* சட்ட முதுமாணி பட்டத்தை கொழும்பு பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டார்.

அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமுமாக கொண்ட இவர் ஆயுர்வேத வைத்தியருமாவார்.





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பரிமாற்றம், தற்கால அரசியல் நிலவரம் தொடர்பில் தேசிய அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளை தெளிவூட்டும் நிகழ்ச்சி பொது நூலகச் சேவைக் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.



கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள செலான் வங்கி தலைமையகத்தில் நேற்று (16) நடைபெற்ற தை பொங்கல் தின நிகழ்வின் போது எடுக்கப் பட்ட படம்.



கண்டி மகியாவ ஐயப்ப சேவா சங்கத்தில் மாலை அணிந்த சாமிகள் இருமுடி சுமந்து சபரிமலை யாத்திரை மேற்கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.
(படம் : மு . தீபன் கண்டி)


# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக கேள்விகோரல் அறிவித்தல் 2024 ஜனவரி 17 புதன் மற்றும் 2024 ஜனவரி 20 சனி தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

CONSTRUCTION OF LEAD AWAY DRAIN FROM INTERNAL BOUNDARY ROAD UPTO ARUNAGAMA ROAD AT WAGAWATTA INDUSTRIAL ZONE
CONTRACT NO : BOI/TS/WIZ/2024/01/33.01.019

இப் பெறுகைக்காக குறித்த கேள்விப்பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2024 ஜனவரி 17 புதன் மற்றும் 2024 ஜனவரி 20 சனிக்கிழமை தின (Daily News) பத்திரிகையின் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறோம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**



# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.08 ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ.ஐ.பி விஜயவிக்கிரம அத்தாட்சிப்படுத்திய 2019.04.08ஆம் திகதியிடப்பட்ட 536ஆம் இலக்க ஈட்டு முறியின் பேரில் இலக்கம் 93/3, வலஹேன கொடெல்ல, தன்கொட்டுவ எனும் முகவரியில் அமைந்துள்ள ஃப்ரிடென்ட் உலு கம்ஹல என்ற நிறுவனத்தின் தனி உரிமையாளரான திரு.ஜெயசூரிய இலிப்பிகே அமித ஷாமக பெரேரா என்பவர் பெற்றுக்கொண்ட தவணைக் கடன் வசதி மீது 2023.09.27ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 17,089,402.67 ரூபாயும் (பதினேழு மில்லியன் எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றிரண்டு ரூபாய் அறுபத்தேழு சதம்) அத்துடன் 2023.09.28ஆம் திகதி வரையில் 9,500,000.00. ரூபாய் (ஒன்பது மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் இரண்டு ஐந்து (27.25%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ.ஐ.பி விஜயவிக்கிரம அத்தாட்சிப்படுத்திய 2019.04.08ஆம் திகதியிடப்பட்ட 536ஆம் இலக்க ஈட்டு முறியின் பேரில் நிலுவையாகவுள்ள 17,089,402.67 ரூபாயையும் (பதினேழு மில்லியன் எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றிரண்டு ரூபாய் அறுபத்தேழு சதம்) அத்துடன் 2023.09.28ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட மேலதிக வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த

சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரீ.கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வாய்க்கால் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணையானது**

"கெடகெலகஹவத்த" என்று அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பாலேந்திரன் தயாரித்த 2009.02.21ஆம் திகதியிட்ட 2009/03/28 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1A வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிடிகல் கோரளையின் ஒதர பலாத்தவில், வென்னப்புவ பிரதேச சபை எல்லைகளுள், தங்கொட்டுவ பிரதேச செயலகப்பிரிவில், 473, கொடெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், தம்பரவில எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வீடுகளிலிருந்து கொடெல்ல வரையிலான வீதியையும் (15 அடி அகலம்) கிழக்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு Bஐயும் தெற்கில் 15-20 அடி அகலமான வீதியையும் ஜெ.ஐ.ருபாஸ் என்பவரின் காணியையும் மேற்கில் ஜோசப்ஹினே ரணசிங்ஹ என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது ஒரு ரூட் மற்றும் பதினொரு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.ஆர்1.பே11.75) பரப்பளவுடன் அங்குள்ள மண், மரம், கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் E 154/103 என்ற இலக்கத்தின் கீழ் மாரவில காணி பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**எஸ்.டபிள்யு.கே.வி.என்.பெர்ணான்டோ**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**வாய்க்கால் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்


நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சவளகடை கமநலச் சேவை நிலையத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்செய்கை அறுவடைக்கு தயாராகிவருவதை காண முடிகிறது. வெள்ளத்தினால் தாழ்நில வேளாண்மை அழிவுற்ற நிலையில் எஞ்சிய நெற்பயிர்செய்கையை அறுவடை செய்ய வேண்டுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(படங்கள்:நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)




# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு J.M.R.N.L குணதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2016.10.25 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 151, 2018.03.20 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 919, பிரசித்த நொத்தாரிசு R.A.I.P. விஜயவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2020.03.02 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 984, மேலதிக ஈட்டுமுறி இல. 985 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது கடன் வசதி மீது 2023.10.26 ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 30,325,778.44 ரூபாயும் (முப்பது மில்லியன் முந்நூற்று இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) அத்துடன் 2023.10.27 ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 12.04% வீதப்படி (பன்னிரண்டு தசம் பூச்சியம் நான்கு) 20,000,000.00 ரூபாய் (இருபது மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இரண்டாவது கடன் வசதி மீது 2023.10.26ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 36,119,898.68 ரூபாய் (முப்பத்தாறு மில்லியன் நூற்றுப் பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றெட்டு ரூபாய் அறுபத்தெட்டுச் சதம்) அத்துடன் 2023.10.27ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 13.5% வீதப்படி (பதின்மூன்று தசம் ஐந்து) 26,000,000.00 ரூபாய் (இருபத்தாறு மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் மூன்றாவது கடன் வசதி மீது 2023.10.26ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 14,208,664.98 ரூபாயும் (பதினான்கு மில்லியன் இருநூற்றெட்டாயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு ரூபாய் தொண்ணூற்றெட்டுச் சதம்) அத்துடன் 2023.10.27ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 13.5% வீதப்படி (பதின்மூன்று தசம் ஐந்து) 10,230,000.00 ரூபாய் (பத்து மில்லியன் இருநூற்று முப்பதாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2023.10.26ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 3,056,506.84 ரூபாயும் (மூன்று மில்லியன் ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்றாறு ரூபாய் எண்பத்து நான்கு சதம்) அத்துடன் 2023.10.27ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 28.75% வீதப்படி (இருபத்தெட்டுத் தசம் ஏழு ஐந்து) 3,000,000.00 ரூபாய் (மூன்று மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 93/3, வலஹேன, கொடெல்ல, தங்கொட்டுவ என்ற முகவரியிலுள்ள பிரீடென்ட் உலு கம்ஹல என்ற நிறுவனத்தின் ஏக உரிமையாளர் திரு. ஜயசூரிய இலிப்புகே அமித ஷாமக்க பெரேரா என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 151, 919, 984, மேலதிக ஈட்டுமுறி இல. 985 ஆகியவற்றின் பேரில் வருமதியாகவுள்ள முதலாவது கடன் வசதி மீதான மேற்குறித்த 30,325,778.44 ரூபாயையும் (முப்பது மில்லியன் முந்நூற்று இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) இரண்டாவது கடன் வசதி மீதான 36,119,898.68 ரூபாயையும் (முப்பத்தாறு மில்லியன் நூற்றுப் பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றெட்டு ரூபாய் அறுபத்தெட்டுச் சதம்) மூன்றாவது கடன் வசதி மீதான 14,208,664.98 ரூபாயையும் (பதினான்கு மில்லியன் இருநூற்றெட்டாயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு ரூபாய் தொண்ணூற்றெட்டுச் சதம்) நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீதான 3,056,506,84 ரூபாயையும் (மூன்று மில்லியன் ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்றாறு ரூபாய் எண்பத்து நான்கு சதம்) அத்துடன் 2023.10.27 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரி. கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வாய்க்கால் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேலே கூறப்பட்ட அட்டவணை**

"வத்த" என அறியப்படும் "முறுதகஹஓவிட்ட" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் W.J.M.G.டயஸ் தயாரித்த 1986.06.12 ஆம் திகதிய 822A/86 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோரளை தெற்கு, ஒதார பலாத்த, வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தங்கொட்டுவ பிரதேச செயலகத்தின் 473 - கொடெல்ல கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒதார தமபரவில்ல இன்னும் சரியாகக் கூறின் கொடெல்ல கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அரசுக்குச் சொந்தமான கொலனியையும் கிழக்கில் W. 0மேரி ஹறியெற் தம்மேல் மற்றும் B.H. செபியஸ் பற்றிக் விக்ரா பெரேரா ஆகியோரின் காணியைப் பிரிக்கும் பாதையையும் தெற்கில் திருமதி. நோயல் என்பவரின் காணியையும் மேற்கில் பேதுரு என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இரண்டு ரூட்கள் முப்பத்து ஐந்து பேர்ச்சுகள் (A0.R2.P35) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி மாரவில்ல காணிப்பதிவகத்தில் E 300/11 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டு பின்னர் E 243/76 என்ற இலக்கத்திற்கு மாற்றப்பட்டது.

குறித்த காணியானது தற்போது "முறுதகஹவத்த என அறியப்படும் முறுதகஹஓவிட்ட" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2016.02.15ஆம் திகதிய 2016/1/139 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் காணித்துண்டு 01 என விபரிக்கப்பட்டுள்ளதோடு மேற்குறிப்பிட்டவாறு ஒதார தமபரவில்ல இன்னும் சரியாகக் கூறின் கொடெல்ல கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அரசுக்குச் சொந்தமான காணியையும் கிழக்கில் பிரதேச சபைப் பாதையையும் தெற்கில் ஒலிவர் என்பவரின் காணியையும் மேற்கில் வடிகாலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இரண்டு ரூட்கள் முப்பத்து ஐந்து பேர்ச்சுகள் (A0.R2.P35) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

**மேலே கூறப்பட்ட இரண்டாவது அட்டவணை**

மேலே முதலாவது அட்டவணையிற் கூறப்பட்ட காணி மற்றும் நிலமனையுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள அனைத்தும்.

| No. | Description | Model | Specification |
|---|---|---|---|
| 01. | Conveyer | BC350x4M Serial | No.X-1-980828-31-49 |
| 02. | Circular Screen Feeder (Disk Screen Feeder) | CSF 10-51122 | |
| 03. | Conveyer | BC450x11M | Serial No. X2-980828-31-2 |
| 04. | Conveyer | C450x22.5M | Serial No. X2-980828-31-7 |
| 05. | Conveyer | BC450X1.7M | Serial No. X2-980828-31-11 |
| 06. | BOX Feeder | B05 | Serial No. B05-001 |
| 07. | Conveyer | BC350x11M | Serial No. X1-980828-31-37 |
| 08. | Box Feeder II | B05 | Serial No. B05-002 |
| 09. | Tile Unloading Machine | UM01 | Serial No. UM01-005 |
| 10. | Conveyer | BC450x9M | Serial No. X2-980828-31-47 |
| 11. | Conveyer | BC350x10.5M | X1-980828-31-48 |
| 12. | Clay Extruder | EX01-001 | |
| 13. | Auto Cutter | ACT-3KMX | SerialNo.R2-980828-31-1 |
| 14. | Tile Press Machine | VCP-1 | Serial No. P4-980828-31-1 |
| 15. | Tile Turning Machine | GTR-IK | Serial No. U7-980828-31-1 |
| 16. | Tile chain Conveyer Machine | FCP-1-Y | Serial No. U8-980828-31-2 |
| 17. | Tile chain Conveyer Machine | FCW-1F | Serial No. U6-980828-31-1 |
| 18. | Tile Loading Machine | LM01 | Serial No. LM01-001 |
| 19. | Trolley Traveler | TT01 | Serial No.TT01-001 |
| 20. | Conveyer | BC440-X-9-M | Serial No. X2-980828-31-36 |
| 21. | Main Press | BCP1 | Serial No. P4-980828-31-2 |
| 22. | Tile Turning Machine | GTR-IS | Serial No. U7-980828-31-2 |
| 23. | Tile chain Conveyer Machine | FCW-1F | Serial No. U6-980828-31-2 |
| 24. | Unloading Machine | UM01-006 | |
| 25. | Loading Machine | LM01-002 | |

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

**திருமதி. W.K.V.N. பெனான்டோ,**
**முகாமையாளர்.**

**இலங்கை வங்கி,**
**வாய்க்கால் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்



# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.06 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.08.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 458 இன் பேரில் புத்தளை, உடகம, படல்கும்புர வீதி, இல. 148ல் வசிக்கும் திரு. விஜேசுந்தர முதியன்சேலாகே நந்தசேன என்பவரிடமிருந்து 1 ஆவது கடன் மீது 2023.10.17 வரை முதலும் வட்டியும் ரூ. 10,953,787.72 (பத்து மில்லியன் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று ஆயிரத்து எழுநூற்று எண்பத்தேழு ரூபாய் எழுபத்திரெண்டு சதமும்) அத்துடன் ரூ. 9,055,313.71 (ஒன்பது மில்லியன் ஐம்பத்தைந்து ஆயிரத்து முந்நூற்றுப் பதின்மூன்று ரூபாய் எழுபத்தொரு சதம்) மீது ஆண்டுக்கு இருபத்தாறு தசம் இரண்டு ஐந்து (26.25%) வீதத்தில் 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2 ஆவது கடன் மீது 2023.10.17 வரை முதலும் வட்டியும் ரூ. 3,344,488.07 (மூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்திநான்கு ஆயிரத்து நானூற்று எண்பத்தெட்டு ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் ரூ. 3,000,000.00 (மூன்று மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பூச்சியம் (0%) வீதத்தில் 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 3ஆவது கடன் மீது 2023.10.17 வரை முதலும் வட்டியும் ரூ. 335,963.91 (முந்நூற்று முப்பத்தைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றொரு சதமும்) அத்துடன் ரூ. 324,602.28 (முந்நூற்று இருபத்து நான்கு ஆயிரத்து அறுநூற்று இரண்டு ரூபாய் இருபத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பூச்சியம் (0%) வீதத்தில் 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 4 ஆவது கடன் மீது 2023.10.17 வரை முதலும் வட்டியும் ரூ.5,457,450.80 (ஐந்து மில்லியன் நானூற்று ஐம்பத்தேழு ஆயிரத்து நானூற்று ஐம்பது ரூபாய் எண்பது சதமும்) அத்துடன் ரூ. 5,030,296.98 (ஐந்து மில்லியன் முப்பது ஆயிரத்து இருநூற்று தொண்ணூற்றாறு ரூபாய் தொண்ணூற்றெட்டு சதம்) மீது ஆண்டுக்கு எட்டு (8%) வீதத்தில் 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 5 ஆவது கடன் மீது 2023.10.17 வரை முதலும் வட்டியும் ரூ. 2,240,822.14 (இரண்டு மில்லியன் இருநூற்று நாற்பது ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரெண்டு ரூபாய் பதினான்கு சதமும்) அத்துடன் ரூ. 1,933,621.87 (ஒரு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ஆயிரத்து அறுநூற்று இருபத்தொரு ரூபாய் எண்பத்தேழு சதம்) மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து (15.5%) வீதத்தில் 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.08.31 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 458 இன் பேரில் திரு. விஜேசுந்தர முதியன்சேலாகே நந்தசேன என்பவரிடமிருந்து ரூ. 10,953,787.72 (பத்து மில்லியன் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று ஆயிரத்து எழுநூற்று எண்பத்தேழு ரூபாய் எழுபத்திரெண்டு சதமும்), ரூ. 3,344,488.07 (மூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்திநான்கு ஆயிரத்து நானூற்று எண்பத்தெட்டு ரூபாய் ஏழு சதமும்), ரூ. 335,963.91 (முந்நூற்று முப்பத்தைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றொரு சதமும்), ரூ. 5,457,450.80 (ஐந்து மில்லியன் நானூற்று ஐம்பத்தேழு ஆயிரத்து நானூற்று ஐம்பது ரூபாய் எண்பது சதமும்), ரூ.2,240,822.14 (இரண்டு மில்லியன் இருநூற்று நாற்பது ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரெண்டு ரூபாய் பதினான்கு சதமும்) அத்துடன் 2023.10.18 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணைகளில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T. &H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி படல்கும்புர கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**ஈட்டுமுறியில் மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்தில் புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் புத்தளை கோரளை புத்தளை கிராம சேவகர் பிரிவில் புத்தளை உடகமவில் மீகஹவெல கிராமத்தில் அமைந்த திக்யாய என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான பிரிக்கப்பட்ட குறித்த காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஜீ.சீ. புஷ்பகுமார தயாரித்த 1997.08.20 திகதியிட்ட அளவை வரைபடம் இல. 833 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு இல.01 என எல்லை நிர்ணயித்த அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01, வடக்கில் எப். வீ.பீ. 171 இல் காணித்துண்டு இல. 233உம், ஜே.எம் ஹீன்மெனிகா உரிமை கோரும் காணியும், கிழக்கில் எப்.வீ.பீ.171 இல் காணித்துண்டு இல. 234 இன் மீதிப்பாகமும், தெற்கில் எப்.வீ.பீ. 171 இல் காணித்துண்டு இல. 235, ஜே.எம். பொடிமஹத்தயா உரிமைகோரும் காணியும், மேற்கில் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் (ஆர்.டீ.ஏ) எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (ஏ.0, றூ.1, பே.00) அல்லது ஹெக்டயர்கள் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஒன்று இரண்டு (0.1012 ஹெக்டயர்கள்) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம், மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மொனராகலை மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO/M22/206 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்கூறிய காணி அண்மையில் மீளளவை செய்து பின்வருமாறு விபரித்துள்ளது.**

ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்தில் புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் புத்தளை கோரளை புத்தளை உடகம கிராம சேவகர் பிரிவில் மீகஹவெல கிராமத்தில் அமைந்த திக்யாய (வரைபடத்தின் படி கெடலோகொடஹேன) என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான பிரிக்கப்பட்ட குறித்த காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.ஏ ரஞ்சன தயாரித்த 2015.03.29 திகதியிட்ட அளவை வரைபடம் இல, 2018 இல் காணித்துண்டு இல. 01 என எல்லை நிர்ணயித்த அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01, மேற்கூறிய வரைபடத்தின் படி வடக்கில் எப்.வீ.பீ. 171 இல் காணித்துண்டு இல. 233உம் (ஜே.எம் ஹீன்மெனிகா உரிமை கோரும் காணி), கிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.ஜீ.எஸ். புஷ்பகுமார தயாரித்த வரைபடம் இல. 833 இல் காணித்துண்டு 02உம் (எப்.வீ.பீ. 171 இல் காணித்துண்டு 234 இன் மீதிப்பாகமும்), தெற்கில் எப்.வீ.பீ. 171இல் காணித்துண்டு இல 235 (ஜே.எம். பொடிமஹத்தயா உரிமைகோரும் காணி), மேற்கில் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் (ஆர்.டீ.ஏ) எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (ஏ.0,றூ.1, பே.00) அல்லது ஹெக்டயர்கள் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஒன்று இரண்டு (ஹெக். 0.1012) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் பிரவேசப் பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும்.

**(ஒதுக்கங்கள்)**

1. இக்காணியில் அல்லது அதில் காணப்படும் கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை குறிப்பாக மேட்டு நிலத்தில் 0.202 ஹெக்டெயார்களை விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பங்கின் அதாவது ...................... பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின் போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின் போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் எழுத்துமூலம் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இன்றேல் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் கைமாற்றக்கூடாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**திரு. எச்.கே.டீ.டபிள்யு.எம்.சீ.ஜே.பி. திவாரத்ன.**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**படல்கும்புர கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

# பிரதான கழக மட்டத் தொடரில் சம்பியனானது எஸ்.எஸ்.சி. அணி

செபஸ்டியன் விளையாட்டுக் கழகத்தை 71 ஓட்டங்களால் வீழ்த்திய எஸ்.எஸ்.சி. அணி பிரதான கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடரின் சம்பியன் கிண்ணத்தை வென்றது. கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நேற்று (16) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவிஷ்க பெர்னாண்டோ தலைமையிலான எஸ்.எஸ்.சி. அணி நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் அந்த அணி முக்கிய இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

அவிஷ்க பெர்னாண்டோவால் 6 ஓட்டங்களையே பெற முடிந்ததோடு தடைக்கு பின் கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பி இருக்கும் ஆரம்ப வீரர் தனுஷ்க குணதிலக்க 23 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் மத்திய வரிசையில் களமிறங்கிய விக்கெட் காப்பாளரான கிரிஷான் சஞ்சுல சிறப்பாக ஆடி அணியின் ஓட்டங்களை அதிகரிக்க உதவினார். 125 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 84 ஓட்டங்களை பெற்றார். பின் வரிசையில் சமிந்து விக்ரமசிங்க ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.






இதன்படி எஸ்.எஸ்.சி. அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய செபஸ்டியன் அணி ஆரம்பம் தொட்டு மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது. 2 ஓட்டங்களை பெறுவதற்குள் ஆரம்ப ஜோடியை இழந்த அந்த அணிக்கு மத்திய வரிசை வீரர்களும் கைகொடுக்கவில்லை.

இதனால் அந்த அணி 42 ஓவர்களில் 130 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. மத்திய பின் வரிசையில் சாமிக்க எதிரிசிங்க அதிகபட்சமான 37 ஓட்டங்களை பெற்றார். இறுதியில் செபஸ்டியன் அணி 42 ஓவர்களில் 130 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு கிஷான் பாலசூரிய மற்றும் நுவனிந்து பெர்னாண்டோ தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.




# ஆண்டின் சிறந்த வீரருக்கான பிஃபா விருது மெஸ்ஸி வசம்

ஆண்டின் சிறந்த கால்பந்து வீரருக்கான பிஃபா விருதை ஆர்ஜன்டீன முன்கள வீரர் லியோனல் மெஸ்ஸி வென்றுள்ளார்.



இன்டர் மியாமி அணியைச் சேர்ந்த மெஸ்ஸி, மான்செஸ்டர் சிட்டியின் ஏர்லிங் ஹாலன்டை பின்தள்ளியே இந்த விருதை வென்றதோடு பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் முன்கள வீரர் கைலியன் ம்பப்பே மூன்றாவது இடத்தை பெற்றார்.

36 வயதான மெஸ்ஸி 2023 ஆம் ஆண்டை பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியுடன் ஆரம்பித்த போதும் ஜூன் மாதத்தில் இன்டர் மியாமி கழகத்தில் இணைந்தார். அவர் இதற்கு முன்னர் 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிலும் பிஃபாவின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார்.

பிரான்ஸின் லீக் 1 சம்பியன் கிண்ணத்தை வென்ற பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக ஒன்பது கோலை புகுத்திய மெஸ்ஸி, பின்னர் அமெரிக்காவின் முதல் லீக் கிண்ணத்தை வென்ற இன்டர் மியாமி அணிக்காக ஏழு போட்டிகளில் 10 கோல்களை புகுத்தி இருந்தார்.

பிஃபாவின் 2023ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீராங்கனை விருதை ஸ்பெயினின் உலகக் கிண்ண வெற்றியாளர் அய்தானா பொன்மாத்தி தட்டிச் சென்றுள்ளார்.




கற்பிட்டி பிரீமியர் லீக் தொடரில் மஹஸீன்ஸ் கழகத்தை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்ற லியோ கிங்ஸ் கழக அணியை காணலாம்.

(படம்: கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)

# அமெ. ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் டிரம்ப் முன்னிலை



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளரை தேர்வு செய்யும் அயோவா மாநிலத்தில் இடம்பெற்ற முதலாவது வாக்கெடுப்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த திங்களன்று இடம்பெற்ற இந்தத் தேர்தலில் ஐக்கிய நாடுகளுக்கான முன்னாள் அமெரிக்கா தூதுவர் நிக்கி ஹாலி மற்றும் புளோரிடா ஆளுநர் ரொன் டிசன்டிஸை பின்தள்ளி மூன்றாவது முறை குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதில் டிரம்ப் முன்னிலை பெற்றுள்ளார்.

இதில் 40 பிரதிநிதிகளில் டிரம்ப் குறைந்தது 20 பிரதிநிதிகளை வெற்றுள்ளார். இதில் இரண்டு பிரதிநிதிகளை மாத்திரம் வென்ற இந்திய வம்சாவளியான விவேக் ராமசுவாமி போட்டியில் இருந்து விலகி டிரம்புக்கு ஆதரவை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு கடைசியில் இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளர் போட்டியில் இருக்கும் டிரம்ப், நான்கு குற்றவியல் குற்றச்சாட்டு உட்பட பல வழக்குகளை எதிர்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க கப்பல் மீது ஹூத்திக்கள் தாக்குதல்



யெமன் கடலுக்கு அப்பால் அமெரிக்காவுக்கு சொந்தமான சரக்குக் கப்பல் ஒன்றை இலக்கு வைத்து ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் பலிஸ்டிக் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஜிப்ரால்டர் ஈகள் என்ற அந்தக் கப்பலில் இருப்பவர்களில் எவருக்கும் காயம் அல்லது குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படவில்லை என்று மத்திய கிழக்குக்கான அமெரிக்க இராணுவ கட்டளையகம் குறிப்பிட்டுள்ளது.

மார்ஷல் தீவுகளின் கொடியுடனான அந்தக் கப்பல் அதென் குடாவை நோக்கிய பயணத்தை தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது. பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிர்ப்பு வெளியிட்டு ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கடந்த நவம்பர் தொடக்கம் செங்கடலில் செல்லும் கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

செங்கடலில் உள்ள அமெரிக்க போர் கப்பல் மீது ஹூத்திக்கள் நேரடி தாக்குதல் நடத்தி சில மணி நேரத்தின் பின்னரே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக யெமனின் ஹூத்திக்களின் இலக்குகள் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இரு முறை தாக்குதல் நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# ஈராக், சிரியாவில் ஈரான் தாக்குதல்

ஈராக்கின் அரை சுயாட்சி குர்திஸ்தான் பிராந்தியத்தில் உள்ள இஸ்ரேலிய உளவுத் தலைமையகங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக ஈரான் புரட்சிப் படை தெரிவித்திருப்பதோடு சிரியாவில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழுவுக்கு எதிராக தாக்குதல் நடத்தியதாக ஈரான் படை கூறியது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் பிராந்திய நாடுகளுக்கு பரவும் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் சூழலிலேயே கடந்த திங்கட்கிழமை (15) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. லெபனான், சிரியா, ஈராக் மற்றும் யெமனில் ஈரான் ஆதரவு போராளிகள் ஏற்கனவே தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

“புரட்சிப் படை மற்றும் ஆதரவு படை தளபதிகளின் கொலைகளுக்கு காரணமான சியோனிச அரசின் அண்மைய அட்டூழியங்களுக்கு பதிலடியாக, ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்தில் உள்ள பிரதான மொசாட் உளவுத் தலைமையகங்களில் ஒன்று பலிஸ்டின் ஏவுகணைகள் மூலம் தாக்கி



அழிக்கப்பட்டது” என்று ஈரான் புரட்சிப் படை குறிப்பிட்டுள்ளது. எனினும் எர்பிலில் குடியிருப்புப் பகுதியில் பொதுமக்கள் கொல்லப்பட்ட ஈரானின் தாக்குதலை கண்டிப்பதாக ஈராக் தெரிவித்துள்ளது. இதனை பொறுப்பற்றதும் துல்லியமற்றதுமான தாக்குதல் என்று அமெரிக்கா கண்டித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டு மேலும் ஆறு பேர் காயமடைந்ததாக குர்திஸ்தான் பிராந்திய பாதுகாப்புச் சபை கூறியது. இதில் கொல்லப்பட்டவர்களில் முன்னணி வர்த்தகரான பஷ்ரேவ் தியாசியும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர ஒரு ரொக்கெட் குண்டு மூத்த குர்திஷ் உளவு அதிகாரியின் வீட்டின் மீதும் மற்றொரு ரொக்கெட் குர்திஷ் உளவு மையம் மீதும் விழுந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை அடுத்து எர்பில் விமானப் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஈரான் இதற்கு முன்னரும் ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்தின் மீது தாக்குதல்களை நடத்தி இருப்பதோடு அந்தப் பகுதியில் ஈரானிய பிரிவினைவாதக் குழுக்கள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு தளம் வழங்கப்படுவதாக குற்றம் சாட்டி வருகிறது.

ஈரானின் அறிவிப்பு குறித்து இஸ்ரேலிடம் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

இதேவேளை சிரியாவின் வடமேற்கு நகரான அலெப்போ மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் மத்தியதரைக் கடல் திசையில் இருந்து வந்த நான்கு ஏவுகணைகள் தாக்கியதாக பிரிட்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் கூறியது.

ஈரானில் இந்த மாதம் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் புரட்சிப்படை குறிப்பிட்டது. தெற்கு ஈரானில் இடம்பெற்ற அந்த தற்கொலை தாக்குதலில் குறைந்தது 94 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காசாவில் அடுத்த கட்ட போர் நடவடிக்கை குறித்து இஸ்ரேல் அறிவிப்பு: உயிரிழப்புகள் தொடர்கின்றன

தெற்கு காசாவில் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கையின் தீவிரத் தன்மை குறைத்துக்கொள்ளப்படும் என்று இஸ்ரேல் அறிவித்தபோதும், காசாவெங்கும் நீடிக்கு இடைவிடாத தாக்குதல்கள் தொடர்வதோடு நூற்றுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

காசாவில் அதிகரித்துவரும் உயிரிழப்புகள் சர்வதேச அளவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தத்தை அதிகரித்துள்ளது. ஐ.நா தலைவர் அன்டோனியோ குட்டரஸ் திங்கட்கிழமையும் மோதல்களை நிறுத்தும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

“போதுமான உதவிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், பரந்த போர் ஒன்று வெடிப்பதை தவிர்ப்பதற்கும் உடனடி மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்று தேவையாக உள்ளது” என்று குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் தொடரும் போர் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் கொந்தளிப்பு சூழலை ஏற்படுத்தி இருப்பதோடு இஸ்ரேலுடனான லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லா போராளிகளுடன் மோதலை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது ஹூத்திக் கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதல்கள் செங்கடலில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் காசாவில் பலஸ்தீன போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகள் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. கடும் எதிர்ப்பை சந்தித்து வரும் இஸ்ரேலிய தரைப்படையின் மற்றொரு வீரர் கொல்லப்பட்டிருப்பதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

தெற்கு காசாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோதலிலேயே 21 வயதான அந்தப் படை வீரர் கொல்லப்பட்டுள்ளார். இதன்படி காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 186 ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேலிய இராணுவம் வடக்கு காசா மற்றும் தெற்கில் கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களை இலக்கு வைத்து சரமாரித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை (15) செய்தியாளர் சந்திப்பில் பேசிய இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், தீவிர நடவடிக்கைகள் விரைவில் முடித்துக் கொள்ளப்படும் என்றார்.

“தீவிர நடவடிக்கை கட்டம் சுமார் மூன்று மாதங்களுக்கு நீடிக்கும் என்பதை நாங்கள் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்” என்று கூறிய கல்லன்ட் வடக்கு காசாவில் ஏற்கனவே அந்தக் கட்டத்தை அடைந்துவிட்டதாக தெரிவித்தார்.

“தெற்கு காசாவில் இந்த அடைவை எட்டுவோம் என்பதோடு அது விரைவில் முடிவுக்கு வரும். இரண்டு இடங்களிலும் நாம் அடுத்த கட்டத்திற்கு செல்லும் தருணம் வரும்” என்று கூறிய அவர், அதற்கான கால எல்லை பற்றி குறிப்பிட்டு கூறவில்லை.

இதில் காசாவில் போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நான்கு படைப்பிரிவுகளில் ஒன்று அங்கிருந்து வாபஸ்பெறும் செயற்பாட்டை பூர்த்தி செய்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் திங்கட்கிழமை உறுதி செய்தது.

எனினும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட இஸ்ரேலிய அதிகாரிகள் காசா போர் தொடர்ந்து பல மாதங்கள் நீடிக்கும் என்று எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காசாவின் பல பகுதிகளிலும் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் கடந்த திங்கட்கிழமை இரவு குறைந்தது 57 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

காசா நகரின் மத்திய அல் சப்ரா பகுதியில் உள்ள அல் சுசி குடும்பத்தினரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு பல டஜன் பேர் காயமடைந்துள்ளனர்.

உக்கிர தாக்குதலால் அந்த வீடு தரைமட்டமாக்கப்பட்டிருப்பதோடு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அல் ஷிபா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதேபோன்று காசா நகரின் தெற்கில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அல் ஹதாத் குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பல குடியிருப்புப் பகுதிகளை இலக்கு வைத்தும் இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக உள்ளூர் தரப்புகளை மேற்கோள்காட்டி வபா செய்தி நிறுவனம் கூறியது.

குறிப்பாக ரபா நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தாய், தந்தை மற்றும் அவர்களின் குழந்தைகள் என ஒட்டுமொத்த குடும்பம் உட்பட குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு கான் யூனிஸில் ஒரே குடும்பத்தின் ஐவர் உட்பட குறைந்தது ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை முடிவுக்கு வந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 132 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு கூறியது. கடந்த நான்கு மாதங்களாக நீடிக்கும் இஸ்ரேலின் வான், தரை மற்றும் கடல் மார்க்கமான தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 24,000ஐ தாண்டியுள்ளது. இதில் சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகமாக உள்ளனர்.

இதேவேளை இரு இஸ்ரேலிய பணயக்கைதிகளுடையது எனக் கூறும் இரு சடலங்களை காட்டும் புதிய வீடியோ ஒன்றை ஹமாஸ் அமைப்பு நேற்று வெளியிட்டது. இவர்கள் காசா மீதான வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது பலஸ்தீன போராளிகளால் கடத்திச் செல்லப்பட்ட பணயக்கைதிகளில் 100க்கும் அதிகமானோர் தொடர்ந்து காசாவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் குறைந்தது மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஹெப்ரோனுக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய படையினருடன் மோதலில் ஈடுபட்ட இரு பலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக வபா செய்தி நிறுவனம் கூறியது. துல்கரமில் இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில் 37 வயது ஆடவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் தொடரும் வன்முறைகளில் 350க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 17ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.